விலை ரூபா: 5.00 பக்கங்கள் பத்து *Registered as a Newspaper in Sri Lanka*

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 13 திங்கட்கிழமை (25.02.2002) தொலைபேசி 3378 ஒலி 68

றெனி மூக்குக் கண்ணாடி அகம்
கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்
540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

RENNY

### ஆண்டிப்பட்டித் தேர்தலில் அமோக வெற்றி

# தமிழக முதல்வராக மீண்டும் ஜெயலலிதா பதவியேற்பார்

### ஓ. பன்னீர்ச்செல்வம் ராஜினாமா



தமிழ் நாட்டின் ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலில் அ.தி.மு.க பொதுச் செயலாளரும் தமிழக முன்னாள் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா அமோக வெற்றியீட்டியுள்ளார். செல்வி ஜெயலலிதா 78 ஆயிரத்து 437 வாக்குகளைப் பெற்றதுடன் தி.மு.க வேட்பாளர் வை.கே. சேகரை 41 ஆயிரத்து 201 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

தேர்தலில் ஜெயலலிதா வெற்றி பெற்றதை அடுத்து அவருக்கு இடம் விட்டுக் கொடுக்கும் வகையில் முதலமைச்சர் ஓ. பன்னீர்ச்செல்வம் ஆளுநர் இராமமோகன்ராவிடம் தனது இராஜினாமாக் கடிதத்தை நேற்று சமர்ப்பித்தார்.

இன்னும் ஓரிரு நாட்களில் தமிழக முதலமைச்சராக மீண்டும் மூன்றாவது முறையாக ஜெயலலிதா பதவியேற்கவுள்ளார்.

இதே வேளை நேற்றுப் பி.ப நடைபெற்ற அ.இ.அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கட்சித் தலைவராக ஜெயலலிதா மீண்டும் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். தேர்தலில் வெற்றி பெற்றமை தொடர்பாக ஜெயலலிதா கருத்துத் தெரிவிக்கையில் எனக்குக் கிடைக்கப் பெற்ற மிகச் சிறந்த பிறந்த நாள் பரிசு இதுவே. இந்தியாவின் முதன்மையான மாநிலமாக தமிழகத்தை உருவாக்குவேன் என்று சூளுரைத்தார்.

இதே வேளை பஞ்சாப், உத்தராஞ்சல் மாநிலங்களில் நடைபெற்ற இடைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டது.(ந-5)

### ஒப்பந்தத்தை அமுல் படுத்த பூரண அதிகாரம் நோர்வேக்கு உண்டு

# ஒற்றை ஆட்சி அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு!

## செய்தியாளர் மாநாட்டில் பிரதமர்

(நமது நிருபர்)



**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் போது ஒற்றையாட்சி என்ற நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் ஒரு போதும் விலகமாட்டாது.**

**நாட்டின் ஒற்றுமையையும், பிரதேசத் தன்னாதிக்கத்தையும் பாதுகாக்கும் கூடப்**

## அனுருத்தவின் புதல்வர்களுக்கு சிறையில் அதி உச்ச காவல்

(கண்டி)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 5ந் திகதி நடைபெற்ற தேர்தலின் போது கண்டி மடவளைப் பகுதியில் 10 முஸ்

சரணடைந்த முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் புதல்வர்களான றொகான் ரத்வத்தை, சானுக ரத்வத்தை ஆகிய இருரும் நேற்று தெல்தெனிய நீதி



யாட்சி என்ற நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் ஒரு போதும் விலகமாட்டாது.

நாட்டின் ஒற்றுமையையும், பிரதேசத் தன்னாதிக்கத்தையும் பாதுகாக்கும் கடப்பாட்டையும் அரசாங்கம் கொண்டுள்ளது. இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நிரந்தர யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தியுள்ள புரிந்தணர்வு ஒப்பந்தத்தில் இருதரப்பும் கைச்சாத்திட்டது தொடர்பாக விளக்கிக் கூறுவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுக் கொழும்பில் முதற் தடவையாக கூட்டியிருந்த செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேலும் விளக்கிக் கூறுகையில்

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நிரந்தர யுத்த நிறுத்தம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானத்துக்கான நல்லதொரு அடித்தளத்தை இட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் எங்கு இடம்பெறும் என்பது

(10ம் பக்கம் பார்க்க)

(கண்டி)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 5ந் திகதி நடைபெற்ற தேர்தலின் போது கண்டி மடவளைப் பகுதியில் 10 முஸ்லிம் இளைஞர்களின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக சரணடைந்த முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் புதல்வர்களான றொகான் ரத்வத்தை, சானுக ரத்வத்தை ஆகிய இருவரும் நேற்று தெல்தெனிய நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட

(10ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இன்று பொங்கு தமிழ்

(வவுனியா)

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்ச்சி இன்று வவுனியாவில் உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்படவுள்ளது.

இப் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகளை வவுனியா பல்கலைக்கழக வளாக சமூகமும், வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரிச் சமூகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

### இரண்டு மாதங்களுக்குள்

## யாழ் - கண்டி வீதி திறக்கப்படும்

## பிரதமர் ரணில் அறிவிப்பு !

(கொழும்பு)

யாழ்-கண்டி (ஏ-9) வீதியை அடுத்த இரு மாதங்களுக்குள் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று தகவல் திணைக்களத்தில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வரையான வீதியில் பல இடங்களில் பலத்த சேதங்கள் காணப்படுவதால் இவற்றை திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கு வெளிநாடுகளிடமிருந்து உதவியை அரசாங்கம் கோரியுள்ளது.

வீதி புனரமைக்கப்பட்டதும் இரண்டு மாதங்களுக்குள் திறந்து விடப்படும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.(ந-4)

## சமாதானத்தை வலியுறுத்திய பாதயாத்திரை வெற்றிகரமாக முடிவு

### ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றினர்.

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சமாதானத்தை வலியுறுத்தி நடத்தப்பட்ட சர்வமத சமாதானப் பாதயாத்திரை நேற்று இரண்டாவது நாளாகவும் மிகவும் உணர்வு பூர்வமாக எழுச்சியுடன் நடைபெற்றது.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் காலை 9.00 மணியளவில் கூடிய ஆயிரக்கணக்கான மக்களுடன் பாதயாத்திரை ஆரம்பமாகியது.

இதனை சம்பிரதாய பூர்வமாக நல்லை ஆதீனக் குரு முதல்வர், அந்தணச் சிவாச்சாரியார்கள், செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன், குரு முதல்வர் வண பிதா ஜே. பி. செல்வராசா அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்கி ஆரம்பித்து வைத்தனர்.

மத குருமார்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், மற்றும் பொது மக்கள் என

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்மொழி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழர் தம் பூர்வீக தாயகத்தில் வாழ நீதியோடு கூடிய சமாதானம் அவசியம்

## பாதயாத்திரையின் முடிவில் முன்மொழிவு

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தை வலியுறுத்தி நடத்தப்பட்ட சர்வமத யாத்திரையின் நிறைவு நாளான நேற்று, யாழ்மாவட்டமனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தினால் மகஜர் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது

அம் மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

நாடு சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் இறுகிவந்த இனப்பிரச்சனை கடந்த 20 ஆண்டுகளாக ஆயுதப் போர் வடிவில் எம்மையும் எம்மண்ணையும் அழித்து முடமாக்கியுள்ளது. எமது பொருளாதாரத்தையும் கலைகலாச்சாரத்தையும் சிதைத்து சீரழித்துள்ளது. சமாதானமின்றி இன்று முழுத் தேசத்தினரும் குறிப்பாக வடக்கு. கிழக்கு மக்கள் சொல்லொண்ணாத் துன்பம் அனுபவித்து வருகின்றனர். போரை நிறுத்தி நாட்டில் அமைதியையும் சுபீட்சத்தையும் உருவாக்க தற்போது நல்லதொரு தருணம் உருவாகி வருகின்றமை வரவேற்கப்பட வேண்டியது. ஏனெனில் இன்றைய எம் தேவைகளில் முன்னிடம் பெறுவதும் அவசியமானதும் சமாதானமே.

நீதியோடு கூடிய சமாதானமும் சமத்துவத்தோடுகூடிய அரசியல் அந்தஸ்தும், அழகிய இந்த இலங்கைத்தீவில் அனைத்து மக்களும் சகோதரத்துவத்தோடு ஒருங்கிசைவாக வாழ வழிசமைக்கும். ஒவ்வோர் இனத்தினுடையவும் மரபுவழி தாயகத்தையும் சுயநிர்ணய உரிமையினையும் கலைகலாசாரப் பண்பாட்டையும் மதித்து ஏற்றுக்கொள்வதன் வழியாகவுமே இன்நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்

### இயல்பு வாழ்வு சமாதான பேச்சுக்கு அடித்தளம்.

சமாதானம் தோன்றினால் நாட்டைச் சீரழிக்கின்ற போரின் தீயவிளைவுகள் அகன்றுவிடும் சமாதானமே எம் ஏக்கமாகவும், நோக்காகவும் இருக்கிறது உருப்பினும் சமாதானத்திற்கான புறச்சூழலை உருவாக்குதல் முக்கியமானதாகும் அதுவே சமாதானப் பேச்சுக்களுக்குஉகந்த முன் சூழலை ஏற்படுத்தித் தரும் விடுதலைப் புலிகளினுடையதும் அரசினுடையதும் யுத்த நிறுத்தம் வரவேற்கப்படவேண்டியது அதுவே எம் இலக்காகிய சமாதானத்திற்கான சிறந்த அடித்தளமாக அமையும் பேச்சுக்களுக்குத் தடையாகவுள்ள தமிழ்பிரதிநிதிகளாகிய புலிகள் மீதான தடையை நீக்குதல், பேச்சுக்களின் சாத்தியத்தையும் சமாதானத்திற்கான நம்பிக்கையையும் உறுதி செய்யும்.

### வன்முறையும் அடிப்படை மனித உரிமை மீறல்களும்

போரிலே நாம் இழந்த உயிர்களை யாரும் மீட்டுத் தந்துவிடமுடியாது. யுத்தத்திலேஇறந்தவர்களும், காணாமற் போனோரும், கைதுசெய்யப்பட்டு சிறைக் கூடங்களில் வாடுவோரும் மறக்கப் பட்டவர்கள் அல்ல அவர்களது இந்நிலைக்குச் சம்பந்தப் பட்டோர் பதிலலித்தேயாக வேண்டும். வாழ்வதற்கான எம் அடிப்படை மனித உரிமையினை யாரும் எமக்கு மறுக்கமுடியாது மனத்தோடும் இறைமையோடும் வாழ்வதற்கு எம் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் மற்றையோருக்கும் பூரண உரிமையுண்டு அவை மறுக்கப்பட்டால் அதுவே சமாதான மறுப்பின் அடையாளமாகிவிடும் எம் பூர்வீக தாயகத்தில் வாழவும் சீவனோபாயம் தேடவும் நாம் உரித்துடையவர்கள்.

பொருளாதார போக்குவரத்துக் கெடுபிடிகள் நீக்கப்பட்டு எம் சுதந்திர நடமாட்டமும்போக்குவரத்தும்தொழில் செய்யும் உரிமையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். பயணப் பாதைகள் திறக்கப்பட சமாதானப் பாதையும் திறக்கப்படும்.

### சிதைந்தவற்றை சீர் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும்

இடப்பெயர்வுகளும் அகதிச் சீவியமும் எம்மைக் கையேந்திப் பிழைக்கும் இழிநிலைக்கு ஆளாக்கி விட்டன. எங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி எம் இயல்பு வாழ்வைத் தொடங்கவும்போரிலே அழிக்கப்பட்ட எம் வீட்டையும் கிராமத்தையும் நகரத்தையும் தொழில் நிலையங்களையும் கல்விக் கூடங்களையும் வணக்கத் தலங்களையும் மீளக் கட்டியெழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குள் வன்னி முன்னிடம்பெறுகின்றமை சுட்டத் தக்கது. நாட்டைக்கட்டியெழுப்பநல்ல திட்டங்கள் வேண்டும்புனருத்தாரண கட்டுமானப் பணிகளுக்கு அரசே பொறுப்பேற்கவும் வேண்டும்.

நாட்டின் வடக்கு கிழக்கில் நிர்வாக அலகு சீர்குலைந்து சிவில்நிர்வாகம் நடைமுறைப் படுத்தப்படாமல் உள்ளது. ஆயுதங்களின் அழுத்தத்தினால் சனநாயக அரசியல்அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ளது. போரும் போர்க்கெடுபிடிகளும் உள்ளவரை சிவில் நிர்வாகம் சாத்தியப்படப் போவதில்லை. இராணுவக் கெடுபிடிகள் மத்தியில்இருந்து கொண்டுசமாதானம்பேசுவது ஒன்றிற்கொன்று முரண்பாடானதாகும்சிவில்நிர்வாக போக்குவரத்து சீர்குலைந்துள்ளதினால் வாழ்க்கைச் செலவு பன்மடங்காகி மக்களை அழுத்துகின்றது மக்கள் விரும்பாத போர் மக்களின் தலைகளிலே சுமத்தப்பட்டிருக்கின்றது. பொருளாதாரத் தடைகளினால் செயற்கைத் தட்டுப்பாடும் போக்குவரத்துக் கெடுபிடியினால் விலையுயர்வும் எம் மக்கள் மீதுதிணிக்கப்படுகின்றன எனவே இயல்பு வாழ்வை உறுதி செய்ய இக் கட்டுப்பாடுகள் களையப்பட வேண்டும் கட்டுப்பாடுகள் களையப்பட போர் கைவிடப்பட வேண்டும் சமாதானத்திற்கான போர் தன்னிலே முரணானது சமாதானச் சாத்தியமற்றது.

### புரிந்துணர்வும் யதார்த்த நோக்குமே சமாதானத்தைத்தரும்

நாட்டின் அரசியல் பொருளாதார நடைமுறை நிதர்சனங்களை அனைத்துத் தரப்பினரும், அரசியல்வாதிகளும், சமய சமூக அமைப்புக்களும் அறிந்துகொள்ள வேண்டும்.

உண்மையை மறைத்து அரசியல் நடாத்த எத்தனிக்கும் எல்லாச் சக்திகளையும் நமே வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சமாதானச் சாத்தியப் பாட்டை சந்தேகக்கண் நோக்காது தம் தனிப்பட்ட, கட்சி, குழு, மதநலன்களுக்காகவும் சலுகைகளுக்காவும் மக்களைப் பலிக்கடாக்களாக்காமல் எல்லோரும் இதயசுத்தியோடு நடந்துகொள்ள வேண்டும்.

பொறுமை காப்பதும், பொறுப்புடன் நடப்பதும் பொருந்தாதனவற்றைக்களைவதும் சமாதானத்திற்கான அடிப்படையாக இருக்கின்றன.

பரஸ்பர குற்றம் சுமத்தல்களையும் நம்பிக்கையீனங்களையும் தவிர்த்து புரிந்துணர்வோடும் பிரமாணிக்சத்தோடும் காரியமாற்ற வேண்டும்

இருபது வருடங்களாக இறுகிய இனப்பிரச்சினையை இரவோடிரவாக நாம் தீர்த்துவிட முடியாது.

இடைப்பட்ட காலத்தில் அரசும் புலிகளும் நாட்டு மக்களும் கரடுமுரடான சமாதானப் பாதையை காத்திரமான தாக்க வேண்டும்.

பேச்சு முன் ஆயத்தங்களில் உள்ள இழுபறிகளும் தாமதங்களும் அரசின் பேச்சுத்திட்டம்சார்பாக சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும்தோற்றுவித்துவிடக்கூடாது.

### சமாதானத்திற்கான ஒரே அறைகூவல்இந்த சர்வமத பாதயாத்திரை

கடந்த பொதுத்தேர்தலில் ஒரே குரலில் ஒலித்த அதே சமாதான விருப்பினை இன்று இலங்கையின் நான்கு மதத்தினராகிய நாமும் ஒத்துஒலிக்கின்றோம். மீளவும் ஞாபகமூட்டுகின்றோம். அதற்காகவே நாம் இந்த ஆன்மீக சாத்வீக பாதயாத்திரையினை கைக்கொள்ள திடம் கொண்டோம்.

சமாதான விரும்பிகள் பலம் சமாதானம் செய்வோரை உறுதிப்படுத்திஉற்சாகமூட்டும் சமாதானத்திற்கான எம் விருப்பமும், வேண்டுதலும் எமக்கு சமாதானம் தரும், சமாதானத்திற்கு உழைப்போரின் கரங்களைப் பலப்படுத்தும், சமாதானப் பாதையின் தடைகளைத்தாண்ட எமக்கு உறுதி தரும்.

நம் நாடும் மக்களும் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் அடைந்துகொள்வார்களாக. இறைவன் அருள் எம் தேசத்தின் மீதும் இருந்து எமக்கு சாந்தியும் சமாதானமும் அருள்வதாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே. வி. பி பிரசாரம்

## நாடளாவியரீதியில்நடத்தும்

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக நாடுதழுவிய ரீதியில் எதிர்ப்புக் கூட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்த ஜே.வி.பி. ஏற்பாடு பெய்துவருவதாக நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் கட்சியின்பிரசாரசெயலர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அரசும் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக நேற்று கொழும்பு நிப்பன் கோட்டலில் பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றை ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்சநேற்று நடத்தியுள்ளரர்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் விமல்வீரவன்ச மேலும் தெரிவித்திருப்பதாவது.

புரிந்துனார்வு ஒப்பந்தத்தின் மூலம் நாடு பிளவுபடுவதை நாம் ஒரு போதும் போத்துக் கெண்டு இருக்க மாட்டோம் இதனை தடுக்கவே நாடுதளுவியாரீதியில் எதிர்ப்பு ஆர்பாட்டங்கள் நடத்தவுள்ளேம் என்றார். (வ)

# சாவகச்சேரியில் மண் அகழ்வதை உடன் தடுக்குக

## அன்ரன் பொன்னையா கடிதம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக் குட்பட்ட பகுதிகளில் பிரதேச சபையின் அனுமதியின்றி சபையின் சட்ட திட்டங்களுக்கு முரணான வகையில் மணல் ஏற்றப்படுவதை தடுக்கக் கோரி யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே. சண்முகநாதனுக்கு சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது.

1998, 1999 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட் பட்ட பகுதிகளான கச்சாய் மற்றும் கெற்பெலி பகுதிகளில்அகழப்படும் மணல் மூலம் கிடைக்கப் பெற்ற நிதியினைக் கொண்டு அப் பகுதிகளின் அபிவிருத்தித் திட்டங்களை மேற் கொண்டுவந்தோம்.

கடந்த அரசின் ஆட்சியில் எமது பிரதேச சபைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாது அரசியற் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்ட போதும் எம்மால் முடிந்த வகையில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தோம்.

தென்மராட்சியில் இடம் பெற்ற யுத்த அனர்த்தத்தினால் சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகள் அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

இந் நிலையில் யுத்தத்தினால் பாரிய சேதத்திற்குஉள்ளான பாடசாலைகள், சந்தைகள் ஆலயங்கள், வீடுகள் கடைகள் மற்றும் சனசமூக நிலையங்கள் போன்றவற்றை புனரமைக்கவும் மீளகுடியெழுப்பவும் மணல் இன்றியமையாததாகும் இதனை எமது சபைக் குட்பட்ட பகுதியிலிருந்து சட்ட விரோதமான முறையில் அகழ்வதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இதனை உடனடியாக தடுத்து நிறுத்த சம்பந்தப் பட்ட அதிகாரிகள் கவனத்துக்கு இவ் விடயம் கொண்டு வரப்பட வேண்டும்.

தவறும் பட்சத்தில் வெகுஜன போராட்டமொன்றை நடத்துவதற்கும் நாம் தயாராகவுள்ளோம் என்றும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

# யா மா ச. உறுப்பினர்களுக்கு கூட்ட அழைப்புக்கள் அனுப்பப் படுவதில்லை

## புளொட் தவநாதன்கவலை

மாநகர சபையின் மாதாந்தக் கூட்டங்களுக்கு ஒழுங்கு முறையான அழைப்புகள் அறிவிப்புகள் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப் படுவதில்லை பத்திரிகைச் செய்திகள் மூலமே கூட்டங்கள் பற்றிய அறிவிப்புகளை அறியவேண்டியுள்ளது.

இவ்வாறு புளொட் அமைப்பின் யாழ். மாநகரசபை உறுப்பினர் .மு.தவநாதன் விடுத்த செய்திக் குறிப்பில் கவலை வெளியிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

முன்னாள் முதல்வர் கொழும்பில்இருந்தகாலத்தில் கூட மாதாந்தக்கூட்ட அறிவித்தல்கள் உரியமுறைப்படி அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால் இன்றையமுதல்வர் நகரத்தில் இருந்தும் கூட்ட அறிவித்தல்கள் கிடைப்பதில்லை.

கடந்த கூட்டஅறிக்கைகள் இதுவரை உறுப்பினர்களுக்குக் கிடைக்கவில்லை. எதிர் வரும்28ம்திகதி நடைபெறும் கூட்டத்திற்கு எம்மைத்தயார் படுத்திக் கொள்ளக்கால அவகாசம் போதுமானதல்ல எனவே இனிவரும் காலங்களிலேனும் இதுபோன்றதவறுகள் அக்கறையீனங்கள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுப்பதற்கு முதல்வர் முயற்சிக்க வேண்டும்என்றும் அதில் கேட்கப்பட்டுள்ளது. (ந)

# வங்கிக்கிளை திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

அரசின் நூறுநாள் செயற் திட்டத்தின் கீழ் யாழ் மத்திய கல்லூரியில் சேவைக்கழக அனுசரணையுடன் தேசிய சேமிப்பு வங்கியின் கிளை திறப்பு விழா இன்று காலை 8,30 பணிக்கு நடைபெறவுள்ளது. (ந-4)

### கட்டாயக் கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதி சனசமூக நிலைய தலைவர், செயலாளர் மற்றும் அங்கத்தவர்களுக்கு கட்டாயக் கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம், எதிர்வரும் 28 ஆம்திகதிபி.ப.3.00 மணிக்கு யாழ்.வலயக்கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

கட்டாயக்கல்வி தொடர்பான செயற்றிட்டம் பாடசாலை மட்டங்களில் நடந்து முடிந்துள்ளது. அத்துடன், சமூக மட்டத்தில் கட்டாயக் கல்வி விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டத்தின் முதல்படியாகவே சனசமூக நிலையங்கள் மூலம் இதுநடத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். (செ-19)

### மெய்வல்லுநர் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சி. சி. த. க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் நிகழ்வு 28ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப 1. 30 மணிக்கு பாடசாலை அதிபர் க. இ. இராசகேரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப்பணிப் பாளர் யோ. ரவீந்திரன், கோப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-03)

# படையினர் யுத்தநிறுத்தத்தை மீறினால் உலகிற்கு நாம் முகம் கொடுக்கவேண்டும்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா

(வவுனியா)

நாட்டில் இப்போது ஏற்பட்டிருக்கும் சமாதானம் நிரந்தர சமாதானமாகமாற படையினரின் பங்களிப்பு மிகவும் அவசியமானது. மூன்றாந்தரப்பு அனுசரணையுடன் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுக்களை படையினர் ஏற்றுக்கொண்டு யுத்த நிறுத்தத்தை மீறும் நடவடிக்கைகளில் இறங்கக் கூடாது அப்படி மீறினால் முழு உலகிற்கும் நாம் முகம் கொடுக்க வேண்டி வரும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா செயலகத்தில் வைத்து புரிந்துணர்வு உடன்படிக்கையில் தான் கையெழுத்திட்ட பிரதியை நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கிடம் கையளித்தபின்னர் வவுனியா விமானப்படைத் தளத்திலுள்ள வன்னிப்பிராந்திய இராணுவ தலைமை அலுவலகத்தில் முப்படையினர் மற்றும் பொலிஸார் மத்தியில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு பிரதமர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது;

சமாதான உடன்படிக்கைகள் மீறப்படும் வேளைகளில் அதனைத் தடுப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமோ அதற்கும் ஆயத்தமாக இருக்க வேண்டும். எனவே படையினர் நாட்டின் எதிர்காலத்தை முன்னிட்டு சிந்தித்துச் செயற்படுவதுடன் தற்போதுள்ள யுத்த நிறுத்தத்தின் பங்காளிகளாகவும் இருக்க வேண்டும்.

போர் நிறுத்தம் அமுலில் இருந்தாலும் படையினர் தயார் நிலையில் இருக்க வேண்டும் பயிற்சிகள் நடைபெறவேண்டும் அவர்களின் குறைபாடுகளும் நீக்கப்பட வேண்டும் எப்படியும் போர் நிறுத்தம் வெற்றிபெற வேண்டும் என்றே விரும்புகின்றோம்.

போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பவர்கள் தரைவழி மட்டுமன்றி, கடல்வழியாகவும் விமான மூலமும் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள்.

போர் நிறுத்தத்தை மீறுபவர்கள் அனைத்துலக நாடுகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருக்கும்.

நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கவும், நாட்டிற்குள் சட்ட விரோதமாக ஆயுதங்கள் கடத்தப்படுவதைத் தடுக்கவும் முப்படையினருக்கும் பூரண அதிகாரம் உள்ளது. இதுவும் புரிந்துணர்வு உடன்பாட்டில் உள்ளது.

ஆட்களைக் கொலை செய்வது, மக்கள்வாழும் பகுதிகளில் குண்டுகளை வெடிக்க வைப்பது, விமானம் மூலம் குண்டுகளைப் போடுவது, கப்பம் அறவிடுவது எல்லாம் தடை செய்யப்பட்டுள்ளன.

சமாதானப் பேச்சுக்கள் நல்ல தீர்வைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. இதனை உலக நாடுகள் அவதானித்துக் கொண்டிருக்கின்றன எனவே படையினர் தூரதிருஷ்டியுடன் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

இப்போதுள்ள சமாதானம் நீண்ட சமாதானமாக மாறும் போது இந்நாட்டில் பாதுகாப்பு செலவினங்கள் குறையும் அந் நிலையில் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கைச் சுமை[illegible] எல்லாம் நீக்கப்பட்டுவிடும்.

பிரதமர் படையினரின் கேள்விகளுக்கும் பதில் அளித்தார். (எ)

## அமைச்சர்கள் யாழ். விஜயம்

## அரச அலுவலர்களுக்கு அவசர அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோணசன் பெர்னாண்டோ மற்றும் கல்வி, கல்விபயிற்சிகள்அமைச்சர் கபீர்காசீம், சுற்றாடல் இயற்கை வளங்கள் பிரதி அமைச்சர் இந்திக பண்டார நாயக்க உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இம் மாதம் 26,27 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ள வுள்ளனர்.

இது தொடர்பான முக்கிய கூட்டம் ஒன்று இன்று திங்கள் காலை 10.00 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற உள்ளதாக யாழ்.அரச அதிபர்க.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

கீழ்க் குறிப்பிடப்படும் அதிகாரிகள் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளும் வண்ணம் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கல்விப்பணிப்பாளர்கள் 1,2,3,4,5,மேலதிகமாகாண கல்விப்பணிப்பாளர், பணிப்பாளர் உயர் தொழில் நுட்ப நிறுவனம், அதிபர் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி, அதிபர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை- கோப்பாய், பலாலி, பீடாதிபதிகல்வியியற் கல்லூரி, பணிப்பாளர் திறந்த பல்கலைக்கழகம், பாடசாலை அதிபர்கள். யாழ்.இந்துக் கல்லூரி, சென்.ஜோண்ஸ் கல்லூரி யாழ். மத்திய கல்லூரி சென். பற்றிக்ஸ் கல்லூரி வேம்படி மகளிர் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மகாவித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள். சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் உட்பட பல அதிகாரிகளையும்கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க)

## யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்கப்படும்

### ரெலிக்கொம் நிறுவனத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென ரெலிக்கொம் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

விமான நிலையம், ஹோட்டல், நல்ல காற்றோட்டம் உள்ள மத்திய இடமொன்று கிடைத்தவுடன் கிரிக்கெட் மைதானம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## எட்டு அமைச்சர்கள் இன்று பதவியேற்பு

(கொழும்பு)

பிரதமர் ரணிலின் அமைச்சரவையை சேர்ந்த எட்டு அமைச்சர்கள் அமைச்சரவை அந்தஸ்துள்ள, அமைச்சர்களாக இன்று ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளனர்.

இவர்கள் அனைவரினதும் பதவியேற்பு வைபவங்கள் கடந்த இரு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மலிந்த மொறகொட, ராஜித சேனாரத்ன, ரவி கருணா நாயக்கா, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், மகிந்த சமரசிங்க, சந்திரசேகரன், கருணா சேனகொடித்துவக்கு, எஸ். பி. திசநாயக்கா ஆகியோரே கபினெட் அமைச்சர்களாக பதவியேற்கவுள்ளனர்.

அமைச்சர் எஸ். பி. திஸநாயக்காவுக்கு சமுர்த்தி அமைச்சு வழங்கப்படவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-08)

### பருத்தித்துறை வைத்தியசாலையில்

## சீருடைமாற்ற வழியின்றி ஊழியர்கள் அவதி

பருத்தித்துறைஆதாரவைத்தியசாலையில் பணியாற்றும் ஆண்தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் தமது ஆடைகளை மாற்றுவதற்கு போதிய வசதிகள் இன்றி சிரமப்படுவதாக சம்பந்தப்பட்டோர்தரப்பிலிருந்து அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் கடமை புரிவோர் சீருடையுடன் வீதிகளில் நடமாடக் கூடாதென சுகாதார திணைக்களத் தினர் சுற்றுநிருபம் அனுப்பியதை அடுத்து வைத்தியசாலையிலேயே சீருடையை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக ஊழியர் சார்பில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-23)

## இரவு நேர வழிப்பறியால் பொதுமக்கள் அச்சம்

(நவக்கிரி)

அச்சுவேலி வல்லைக்குச் செல்லும் வீதியில் இரவு வேளை வழிப்பறிக் கொள்ளைகள் அதிகரித்துள்ளன.

ஆயுதம் சகிதம் திருட்டுக் கும்பல் ஒன்று இரவுநேரப்பயணிகளை மிரட்டி அவர்களிடம் உள்ள நகை, பணம் என்பவற்றைக் கொள்ளையடிக்கின்றது.

இவ்வீதியால் பயணஞ் செய்வோரின் உடமைகள் பறிக்கப் படுவதுடன், உயிருக்கும் பாதுகாப்பில்லாத நிலையிலேயே பயணிக்க வேண்டியுள்ளதாக பொது மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (செ233)

## வீதிகள் மதகுகள் திருத்தம்

(மந்திகை)

பருத்தித்துறை நகரசபை, அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ், சபையின் 11 இலட்சம் ரூபா நிதியிலிருந்து வீதிகளையும், மதகுகளையும் திருத்தவுள்ளது.

அத்துடன் இத்திட்டத்தில் நகரசபையின் பொது நூலகம் 5 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எ(-23)


## முதலாம் ஆண்டு நினைவுப் பூக்கள்



அன்னை மடியில் 24 - 01 - 1924

ஆண்டவன் அடியில் 07 - 03 - 2001

## திருமதி சரஸ்வதி அண்ணாமலை

திரயோதசி - திதி: 25. 02. 2002

பாசமிகு தாயாய் பாரினில் எமை வளர்த்து
பற்பல சிறப்புப் பெற்று நாம் வாழ
வழி அமைத்தீர்களே.

ஓராண்டு மட்டுமல்ல ஓராயிரம் ஆண்டுகள்
சொன்றாலும் ஒளி வீசும் உங்கள் முகத்தை
மறப் போமா? -அம்மா

உங்கள் ஆத்மா சாந்தியடைய
நீலியம்பனைப் பிள்ளையாரைப்
பிரார்த்திக்கின்றோம்.

மகன்மார்கள்
அ. பால சுப்பிரமணியம் (பாலா)
அ. தனபாலசிங்கம் (தவம்)
(பிரான்ஸ்)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

வேதவுடையார் வளவு
மல்லாகம்.
25. 02. 2002

(4732)

# மாகாண மட்டத்தில் இடம்பெற்ற சமூகக் கல்விப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட சமூகக்கல்விப் போட்டிகள் வெளியிடப்பட்டுள்ளன.

0-200, 201- 500, 501-1000, ஆயிரத்திற்கு மேற்பட்ட பிள்ளைகளையுடைய பாடசாலைகள் என்ற வகைப்படுத்தலின் கீழ் நடத்தப்பட்ட மேற்படி போட்டியில் வெற்றியீட்டிய குடாநாட்டுப் பாடசாலைகளின் விபரம் வருமாறு,

தரம் 6-7

(0-200)

இரண்டாம் இடம்:
கே. கோபிதா - அம்பன் அ. த. க. பாடசாலை.

(ஆயிரத்திற்கு மேல்)

முதலாம் இடம்:
எஸ். ரகுராஜ்- சாவகச்சேரி இந்துக்கல்லூரி
என். வேற்கரன்- சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

மூன்றாம் இடம்:
கே. வாகீசன்- பருத்தித்துறை திரு இருதயக் கல்லூரி
கே. கானரூபன்-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

தரம் 8-9

(0-200)

முதலாம் இடம்:
வை. நிரோஷா-பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்.

இரண்டாம் இடம்:
ஸ்ரீ. சிவதர்சினி - பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித், எஸ். செல்வராஜி மாதகல் நுணசைவித்.

ஐந்தாம் இடம்:
என். ஜசிதரன் - சித்தன் கேணி ஸ்ரீ கணேசா வித்.

(201-500)

முதலாம் இடம்;
வை. பிரசாந்தபானுஜி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.

(501-1000)

மூன்றாம் இடம்:
எஸ். கமலதீசன்- அச்செழு சைவப்பிரகாச வித்.
வி. மணிச்செல்வி- புற்றளை ம. வி, செ. சௌதாமினி பண்ணாகம் மெய்கண்டான் ம. வி,ஈ. ஜெகபரன்- மல்லாகம் ம. வி.

(ஆயிரத்திற்கு மேல்)

ஐந்தாம் இடம்:
என். வாணி- கொக்குவில் இந்துக்கல்லூரி.

தரம் 10-11

(0-200)

முதலாம் இடம்: ரி. மிதுனா கந்தர் மடம் சைவபிரகாசம் வித்.
மூன்றாம் இடம்: கே. ஜானகி கரவெட்டி சிதம்பராக் கல்லூரி.
நான்காம் இடம்: எஸ். பிரதீபன் நுனசை வித்.
வி. லதீஸ்ஆளியவளைசி. சி. ரி. எம். எஸ்

(201-500)

இரண்டாம் இடம்: ஏ. சரத் குமார் - ஊர்காவற்றுறை ம. வி.

நான்காம்இடம்: என். சுவர்ணா கோப்பாய் ம. வி.
-ஐந்தாம் இடம்: பி. மைதிலி செங்குந்தா இந்துக் கல்லூரி.

(501-1000)

முதலாம் இடம்: கே. குணாளன் இமையாணன் அ. த. க. பாடசாலை.
இரண்டாம் இடம்: ஏ. அகிலன் சந்திரபுரஸ்கந்த வரோதய ம. வி.
மூன்றாம் இடம்: எஸ். ரஜீவ் மானிப்பாய் இந்துக்கல்லூரி.

(ஆயிரத்திற்கு மேல்)

முதலாம் இடம்: எம். திருவரங்கன் யாழ்ப்பாணக் கல்லூரி.
ஈ. செந்தூரான் யாழ்ப்பாணக் கல்லூரி.

தரம் 12-13

(0-200)

முதலாம் இடம்: மௌ. வலன்ரீனா-கரவெட்டி சிதம்பராக் கல்லூரி.
இரண்டாம் இடம்: கே. திருமங்களா- உடுத்துறை மகாவித்தியாலயம்.
மூன்றாம்இடம்: கே. சாந்தினி உடுத்துறைமகாவித்தியலயம்.
நான்காம் இடம்: எஸ். விஜிதா உடுத்துறை மகா வித்தியாலயம்.

(201-500)

முதலாம் இடம்: கே. சிறிதரன் புனித கென்றியரசர் கல்லூரி.

(501-1000)

முதலாம் இடம்:
எஸ். பிரபு இணுவில் இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம்:
ரி. ஞானரதன்- விக்கினேஸ்வரா கல்லூரி.

மூன்றாம்இடம்:
எஸ் தனுஜன்- வட்டு இந்துக் கல்லூரி.

(ஆயிரத்துக்கு மேல்)

இரண்டாம் இடம்: கே. வாசுதேவா - யாழ்ப்பாணக் கல்லூரி.
மூன்றாம் இடம்; வி. தனுஷன் பரியோவான் கல்லூரி.

# யாழ். குற்றவியல் அதிகாரி அவசர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அண்மையில் திருட்டுப் போனதாகக் கருதப்படும் 14 மோட்டார் சைக்கிள்களுள் 10 மோட்டார் சைக்கிள்களை உரியவர்கள் பெற்றுக்கொண்டதாகவும், மிகுதி நான்கும் பொலிஸ் நிலையத்தில் உள்ளதாகவும் யாழ். பொலிஸ்நிலையக் குற்றவியல் பொறுப்பதிகாரி நவரட்ணம் திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

யமகா மேற் 90 (2), கொண்டா சி. எம்.125 (1), கொண்டா 50சாளி(1) ஆகிய நான்கு மோட்டார் சைக்கிள்களும் பொலிஸ் நிலையத்தில் உள்ளன. அவற்றை உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

இதேவேளையில், யாழ் பொலிஸ் அதிகாரி மலிகஸ் பேயின் உத்தரவின்படி யாழ். உதவி பொலிஸ் அதிகாரி ஆனந்தசெனவிரட்ண விடுத்த தகவலின் அடிப்படையில் குற்றவியல் பிரிவின் அதிகாரி நவரட்ணம் திஸநாயக்காவின் தலைமையிலான குழு ஒன்று குடாநாடு பூராகவும் இது தொடர்பான பரிசீலனைகளை மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பாக குடாநாட்டில் உள்ள மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களுக்கு அக்குழு சில வேண்டுகோள்களை விடுத்துள்ளது.

இதுவரை யாழ். செயலகத்தில் பதியப்படாத மோட்டார் சைக்கிள்களை பதியுமாறும், வேறொருவரிடம் மோட்டார் சைக்கிள் பெற்றுக் கொள்ளும்போது சம்பந்தப்பட்ட இலக்கங்கள் சரியாக உள்ளதா என்று கவனிக்குமாறும், இலக்கத்தகடுகள் இன்றி வாகனம் செலுத்தும் மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்கள் கைது செய்யப்படுவர் என்றும் கடும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

(க-07)

# போர் நிறுத்த உடன்படிக்கை முறிந்தால் சர்வதேச உதவியுடன் பாதுகாப்பு நடவடிக்கை

## அமைச்சர் ஜீ. எல். பீரிஸ்கூறுகிறார்

(கொழும்பு)

நிரந்தரப் போர் நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை முறிவடைந்தால் சர்வதேச உதவியுடன் நாட்டைப் பாதுகாக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்விடயத்தில் சர்வதேச நாடுகள் எமக்குஉத்தரவாதம் அளித்துள்ளன.

இவ்வாறு அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை அலுவலகமான ஸ்ரீகோத்தாவில் கடந்தவெள்ளிக்கிழமைநடைபெற்றகூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்துள்ளதாவது;

நிரந்தரப் போர் நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட போதிலும் தேசத்தின் பாதுகாப்பை உறுதிசெய்யும் கடமையும், பொறுப்பும் முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் உண்டு. போர் நிறுத்தத்தைக் காரணமாக வைத்துப் பாதுகாப்பு அதிகாரிகள் அசிரத்தையாக இருக்கக் கூடாது.

சமாதானமுயற்சிகள்தொடர்பாகவும் அதனை முன்னெடுப்பதற்கான நிரந்தரப்போர் நிறுத்த உடன்படிக்கை குறித்தும் ஜனாதிபதி மகாசங்கத்தினர் உட்படப்பலருக்கும் அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது. எதையும் அரசாங்கம் மூடிமறைக்கவில்லை. நிரந்தரப் போர் நிறுத்தத்தை வரவேற்ற மகாசங்கத்தினர் இவ்விடயம் குறித்து ஆழமாகச் சிந்தித்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இந்நிலையில் அரசு எந்த நிலைமைக்கும் முகம்கொடுக்கத் தயாராக இருக்கிறது. படையினரும் உஷார் நிலையிலேயே வைக்கப்படுவர்.

கடற்பிராந்தியத்தின் ஊடாக ஆயுதங்களைக் கொண்டுவரபுலிகள் முயற்சிப்பார்களேயானால் எமது விமான, கடற்படையினர் அதனை முறியடிக்கத் தயங்கமாட்டார்கள்.

கடந்தகால அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு எந்தச் சவால்களையும் எதிர்கொள்வதற்கு அரசு தயாராக உள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள் கருஜயசூரியா, எஸ். பி. திஸநாயக்கா, ஆர். ஏ. டி. சிறிசேனஉட்பட பலர் உரையாற்றினர். (எ)

# புலிகள்-அரசு நிரந்தரமான யுத்த நிறுத்தம் ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரி

## கனேடிய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் அண்மையில் புரிந்துணர்வு அடிப்படையில் கைச்சாத்திடப்பட்ட நிரந்தர யுத்த நிறுத்த ஒப்பந்தமானது பிரச்சினைகளை எதிர்நோக்கும் ஏனையஉலக நாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது என கனடா நாட்டு வெளிவிவகார அமைச்சர் பெல்கிரஹம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் தலைவர்களும், மக்களும் புலிகள் இயக்கத் தலைவர்களும் கடைப்பிடித்து வருகின்ற புத்திசாதுரியமான நடவடிக்கையில் சமாதானம் ஏற்பட்டு வருகின்ற இவ்வேளையில், அவர்களால் முன்னெடுத்துச் செல்லப்படும் முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப் போவதாகவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இரு தசாப்த காலமாக நடைபெற்று வந்த போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் இருதரப்பினரும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை வரவேற்கத்தக்க விடயமாகும் என்றார்.

நாட்டுக்கு பொருத்தமான ஒரு அரசியல் தீர்வை காண்பதே இப்போதைய கால கட்டத்தில் செய்யப்பட வேண்டிய ஒன்று. இலங்கைஅரசாங்கத்தால் அரசியல் அமைப்பு சட்டயாப்பு திருத்தியமைக்கப்படுமானால்கனடாஅதற்கு உதவும் என்றும்,

கனடாவில் 2 லட்சத்துக்கு அதிகமான இலங்கையர்கள் வாழ்ந்து வருவதனால், இலங்கைக்கு உதவ வேண்டிய கடப்பாட்டில் எமது நாடு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-8)

# அதிகாரப் பரவலாக்கல் மூலம் நிரந்தர சமாதானம் ஏற்படும்

## அமைச்சர் மெலிந்த மொறகொட

(கொழும்பு)

பேச்சுவார்த்தை மூலம் அதிகாரப்பரவலாக்கலை அமுலாவதை துரிதப்படுத்தினால், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி, மேம்படுத்தமுடியுமென்று பொருளாதார மறுசீரமைப்புத்துறை அமைச்சர் மெலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

யுத்தம் மற்றும் சமாதானத்தின்போது ஊடகங்களின் கடமைகள் என்ற தொனிப் பொருளில் அமைச்சர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; எதிர்க்கட்சி ஆட்சியிலிருந்தாலும், ஊடகங்கள் கட்சி சாராமல் நடுநிலைமையோடு செய்திகளை வெளியிட வேண்டும். இதன் மூலமே ஊடகங்கள் சமூகத்திற்கு சேவையாற்றும்நோக்கம் நிறைவேறும்.

எந்தச் செய்தி ஊடகமாக இருந்தாலும், அரசியல் கலப்பற்றதாகவும், அரசியல்வாதியிடம் அல்லதுஅதன் தலைமையிடம் கடமைப்படாமலும் இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் மொறகொட கூறினார்.

இதே வேளைஇக்கலந்துரையாடலில் ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதி ஜோன் குஸ்சைன் இலங்கைக்கான நோர்வே தூதுவர். ஜோன் வெஸ்பேர்க் மற்றும் வடக்கு கிழக்கு ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்

(இ -4)

# உழவு இயந்திர சாரதிகள் கைது செய்யப்பட்டனர்

## வடமராட்சிகிழக்கில்சம்பவம்

(மந்திகை)

வடமராட்சி கிழக்குப்பகுதிக்கு மண் ஏற்றுவதற்காக சென்ற இரு உழவுஇயந்திரங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சாரதிகள் இருவரும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் கடந்த 22 ஆம் திகதி ஆஜர் செய்யப்பட்டனர்.

வடமராட்சி கிழக்கில் மண் அகழ்வதற்கு ஏற்கனவே தடைவிதிக்கப்பட்டமைஇங்குகுறிப்பிடத்தக்கது. (க-23)

# கொடுப்பனவுகள் இல்லை

(சுழிபுரம்)

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 0 5ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலின் போது கடமையாற்றிய வலிகாமம் மேற்கு கிராமஅலுவலர்களுக்கு இதுவரையில் கொடுப்பனவுகள்வழங்கப்படவில்லையென அதிருப்திதெரிவிக்கப்பட்டுள்ளது.(க-10-)

# அமைதிக்காக குரல்கொடுக்க அனைவரும் முன்வரவேண்டும்

## திருமறைக் கலாமன்றம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

போரும் அவலங்களும் என இரண்டு தசாப்தங்களுக்கு மேல் துயர் சுமக்கும் இனமாக தமிழினம் அனுபவித்த அவலங்களும் துயரங்களும் தீர வேண்டும் என்று முழுச்சமூகமுமே எதிர்பார்த்துக் காத்திருந்த கால கட்டத்தில் தற்போது நெருங்கி வரும் சமாதானக் காற்று நீங்கிச் செல்லாமல் தொடர்ந்து வீசிட அமைதியை விரும்பும் அனைத்து மக்களும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றப் பொதுச் செயலாளர் ஜோன்சன் ராஜ்குமார் சமாதானப் பாதயாத்திரைக்கு ஆதரவு தெரிவித்து விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

முழு நாடுமே ஒன்றுபட்டு அமைதிக்காக குரல்கொடுக்க வேண்டிய இவ் வேளையிலும் அதை தடுப்பதற்கு சில சுய நல சக்திகள் வெறித்தனமாக செயற்படுகின்றன. இச் சக்திகளை முறியடிக்கவும் கூடிவரும் சமாதான சூழல் நிரந்தர அமைதியை எம் மண்ணுக்குபெற்றுத் தருவதற்கும் எங்கள் ஆத்மார்த்த ரீதியான எண்ணங்களை வெளிப்படுத்தி நிற்கவும் இந்த சமாதானத்திற்கான பாதயாத்திரை களம் அமைத்து நிற்கின்றது.

இதற்கு திருமறைக் கலாமன்றமும் தனது முழுமையான ஆதரவை தெரிவித்து நிற்பதுடன், அமைதியை விரும்பும் யாழ் மக்கள் அனைவரும் இந்த யாத்திரையில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் வேண்டி நிற்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## யாழ். பாடசாலைகளில் மிதிவெடி விழிப்புணர்வு

(தென்மராட்சி)

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மிதிவெடி பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை குடா நாட்டிலுள்ள 84 பாடசாலைகளில் நடத்தவுள்ளது.

இத்திட்டம் வலிகாமம், கொழும்புத்துறை, நீர்வேலி, வடமராட்சி, போன்ற இடங்களிலுள்ள பாடசாலைகளில் நடைபெறும் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பயனடையவுள்ளனர். (செ-77)

## பாதீனியச் செடி ஒழிப்பில் அனைவரும் ஈடுபடுக

### அ.சா.நி. இணையம் வேண்டுகோள்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல இடங்களிலும் மிக வேகமாகப் பரவிவரும் பாதீனியம் செடியை இல்லாதொழிக்கும் பணியில்அனைத்துத்தரப்பினரும் ஈடுபட வேண்டும் எனயாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் டகிரங்க வேண்டுகோள்விடுத்துள்ளது.

அந்நிய ஆக்கிரமிப்பின்எச்சசொச்சமாக இருக்கின்ற பாதீனியம் செடி மூலம் நஞ்சு எல்லா இடங்களுக்கும் பரப்பப்பட்டுவருகின்றது.

ஆயினும்கூட, இதுவிடயத்தில் மாவட்ட மட்ட விவசாயிகளுக்குப் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்டமட்டத்தில் இச் செடியின் பரம்பலை இல்லாதொழிப்பதற்கு வேண்டிய உதவிகளைவழங்க அகிலஉலக கெயர்நிறுவனம் மிகவும்ஆர்வமாகவுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (செ-77)

## யுத்த நிறுத்தத்தால் கொழும்பு பங்குச் சந்தை சுட்டெண்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேபுரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டதையடுத்து, கொழும்பு பங்குச் சந்தை நடவடிக்கைள் சூடு பிடித்துள்ளது.

இவ்வாண்டுத் தொடக்கத்திலிருந்து மந்த நிலையில் இருந்து வந்த பங்குச் சந்தை நடவடிக்கைகள், நிரந்தரப் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து உசாரடைந்து பங்குச் சுட்டிகள் உயர்வடைந்துள்ளன.

கொழும்பு பங்குச் சந்தை பங்குச் சுட்டி19. 2புள்ளிகளாலும், ஸ்ரீலங்கா விலைச்சுட்டி 40புள்ளிகளாலும் திடீரென உயர்வடைந்துள்ளது. (இ)

## இராசி பலன்

25-2-2002

(மாசி 13, திங்கள்)
திரயோதசி மு.இ.7.53 வரை
பூசம் பி.ப.4.00 வரை
ராகுகாலம் 8.00-9.30
நல்லநேரம் 12.30-2.00
பிரதோஷ விரதம்

**மேடம்**
தாய்வழி உறவு, உடல் சோர்வு, தொழில் நன்மை, மனச்சஞ்சலம்.

**இடபம்**
அந்நியர் சந்திப்பு, முயற்சி கைகூடும், தனவரவு, குடும்ப நன்மை.

**மிதுனம்**
புதிய திருப்பம், திடீர் நன்மை, வாக்கு கலகம், காரிய தாமதம்,

**கடகம்**
ஜனவசியம், நல்ல முயற்சி, கற்பனை மிகுதி, ஆரோக்கியம்.

**சிங்கம்**
நித்திரைக் குறைவு, சுப செலவு, உறவினர் வெறுப்பு, காரிய தாமதம்.

**கன்னி**
நினைத்த காரியம் கைகூடும், கீர்த்தி, குடும்ப சுகம், பொருள் சேர்க்கை.

**துலாம்**
அதிக பிரயாசை, நல்ல சம்பவம், காரியம் கைகூடும், அதிகாரம்.

**விருச்சிகம்**
புதிய திட்டமிடல், முயற்சி மந்தம், சத்துரு ஜெயம், பிரயாணம்.

**தனுசு**
அமைதிக் குறைவு, வீண் தொல்லை, முயற்சி தடங்கல், திருடர்பயம்.

**மகரம்**
திடீர் பயணம், நண்பர்கள் சந்திப்பு, சுவாரஸ்யம், குடும்ப நன்மை.

**கும்பம்**
காரிய அனுகூலம், சத்துரு ஜெயம், நோய்குணமடைதல், தொழில் மேன்மை.

**மீனம்**
கௌரவக்குறைவு, முயற்சி தாமதம், சயனசுகக்குறைவு, தொழில் விருத்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்.

## அரசு- புலிகளிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து ஜே. வி. பி. கோபாவேசம்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பாதுகாப்பு, ஒருமைப்பாடு, இறைமை என்பனவற்றிற்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே இவ்விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயும் பொருட்டு பாராளுமன்றத்தை விரைவில் கூட்டுமாறு மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் குழுத் தலைவர் விமல்வீரவன்ச சபாநாயகரிடம்எழுத்து மூலம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக பாராளுமன்றத்துக்கோ, ஆளும் கட்சிப் பாராளுமன்றக்குழுவினர்களுக்கோ, அமைச்சர்களுக்கோ அறிவிக்கப்படவில்லை என்பதுடன் நாட்டின் தலைவியான ஜனாதிபதிக்கும் மறைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம்தொடர்பாக40 பேர் கைச்சாத்திட்ட மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளதாக மேலும் வீரவன்ச தெரிவித்துள்ளார். (உ- 8)

# செய்தித் துளிகள்

## கடற்றொழில் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

பாசையூர் சென்.அன்ரனீஸ் கடற்றொழிலாளர் சங்கம் 50 பயனாளிகளுக்கு சுழற்சி முறைக் கட அடிப்படையில், மூவாயிரம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களை வழங்கியுள்ளது.

இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் மேலும் விரிவுபடுத்தப்படும் என்றும் சம்பந்தப்பட்டோர் தெரிவித்துள்ளனர். (க)

## மிதிவெடி விழிப்புணர்வு

(தென்மராட்சி)

பட்டினிக்கு எதிரான இயக்கம் குடாநாட்டில் 50 இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் மிதிவெடி பற்றிய விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது என அறியப்படுகின்றது. (செ-77)

## நிர்வாகிகள் தெரிவு

(கோப்பாய்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனமூக நிலைய வருடாந்த நிர்வாகிகள் தெரிவு கடந்த 22ம் திகதி இடம்பெற்றது.

தலைவர் மு. முரளிதரன், செயலாளர் செ கமலேஸ்வரன், பொருளாளர் ந.சுரேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், 11பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (க-79)

## துண்டுப் பிரசுரம் விநியோகம்

(ஊர்காவற்றுறை)

சமாதானத்திற்கான சர்வமத பாதயாத்திரை ஒழுங்கமைப்புக் குழு சமாதானத்திற்கான சர்வமத பாதயாத்திரை தொடர்பாக துண்டுப் பிரசுரம் ஒன்றை விநியோகித்துள்ளது.

அமைதியை வலியுறுத்தும் வசனங்கள் பலவும் அப்பிரசுரத்தில் காணப்படுகின்றன. (க-75)

## அறங்காவல் குழுக் கூட்டம்

(தென்மாரட்சி)

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவின் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். மார்ட்டீன் வீதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் பணிமனையில்,

அறங்காவல் குழுத்தலைவர் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் நடைபெறும் என குழுவின் நிர்வாகச் செயலாளர் அறிவித்துள்ளார். (க-77)

## புதிய கட்டடத்தில் இயங்கும்

(அரியாலை)

யாழ்.செயலகத்தில் புதிதாக கட்டப்பட்ட 1ஆம் மாடியில் காணி அலுவலகம் இயங்க உள்ளதாக காணிப் பதிவாளர் என்.சதாசிவஐயர் தெரிவித்துள்ளார்.

2ஆம் மாடியில் பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகமும், கீழ்த்தளத்தில் பாரவூர்திகள் தரிப்பிடமும் இயங்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க-225)

## கசிப்பு உற்பத்தி தாராளம்

(தென்மராட்சி)

பொதுமக்கள் மீளக்குடியமர்ந்துள்ள மட்டுவில் வடக்கு பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் தாராளமாக இடம்பெற்று வருவதாகத் தெரியவருகின்றது.

இச்சட்டவிரோத செயலில் பெண்களே ஈடுபட்டுள்ளனர் எனவும் அறியப்படுகின்றது. (க-77)

## படையினரிடம் கோரிக்கை

(தென்மராட்சி)

மட்டுவில் வண்ணாந்தி பாலம் வீதியை மக்கள் பாவனைக்கு திறந்து விடும்படி மட்டுவில் பகுதி மக்கள் பாதுகாப்புப் படையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தினைத் தொடர்ந்து இந்தப்பாதை பொது மக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்படாமல் இருந்து வருகின்றது.

பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் உற்சவம் பங்குனி மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

## கசிப்பு குழுவினர் கைதாகினர்

(கோப்பாய்)

உரும்பிராய் கிழக்கில் இயங்கி வந்த கசிப்புக் குழுவினர்அண்மையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இரு பெண்கள் உட்பட ஆண்கள் பலர் கைது செய்யப்பட்ட போதிலும் பலர் பொலிஸாரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டுத் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிய வருகிறது. (க-79)

## பெரும்போக விதை நெல்

(மானிப்பாய்)

வலிகாமம் பகுதியில் நீரில் மூழ்காத இவ்வருட பெரும்போகத்திற்குத் தேவையான விதை நெல்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச எல்லைக்குட்பட்ட விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

500-1, மொட்டைக் கறுப்பன் போன்ற நெல் இனங்கள் 1400-1600 -வரை விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (க-232)

## நான்காண்டு திட்டம் தயாரிப்பு

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை நான்கு ஆண்டு திட்டத்திற்கான முன்மொழிவுகளை வரைந்துள்ளது.

முகாமைத்துவம், கல்வி, சுகாதாரம், சூழல் முகாமைத்துவமும் அபிவிருத்தியும், மாவட்டப் பயிற்சி, நிர்வாகம், கட்டட புனரமைப்பு போன்ற திட்டங்களை உள்ளடக்கிய வரைபுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி உதவியாளர் செ. ரமேஷ் தெரிவித்தார்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு இவ்வரைபு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 5 ஆண்டுக்கான திட்டங்களும் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை திட்டமிடல் பிரிவினரால் பிரதேச சபைக்குட்பட்ட புள்ளி விபரக் கைநூல் தயாரிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-232)

# பயன் தரும் முறையில் நூறுநாள் வேலைத்திட்டம் கமநலசேவைத் திணைக்களம் நிறைவேற்றும்

**செ. குமாரதாசன்**

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கமநல சேவைத்திணைக்களம் 01. 02. 2002 தொடக்கம் 10 05.3002 வரையப்பட்ட காலப்பகுதியை 100 நாள் அபிவிருத்தித் திட்ட காலப் பகுதியாக பிரகடனப்படுத்தி உள்ளது.மற்றைய திணைக் களங்களில் 100 நாள் அபி விருத்தித் திட்டம் சம்பந்த மான அறிக்கையே சமர்பிக் கப்பட இருக்கின்றது.ஆனால் இத்திணைக்களம் முன்மாதிரி யாக100 நாள் அபிவிருத்தித் திட்டத்தினை 8 நிகழ்ச்சிக ளாக வகுத்துள்ளது.

**தென்னை நடுகை**

100 நாள் வேலைத்திட்டத் தில்முதல்நிகழ்ச்சி, தென்னை நடுகைஆகும் இத்தென்னைக் கென புனர்வாழ்வு புனர மைப்பு சபை 6 இலட்சம் ரூபா பணத்தை ஒதுக்கியுள் ளது. உற்பத்தி செய்யப்படும் தென்னை நாற்றுக்கள் இலவ சமாகவே வழங்கப்படவுள் ளன.தென்மராட்சி, தீவகம் வடமராட்சியின் சில பகுதி கள் வலிகாமத்தில் சில பகுதி களில் இந் நாற்றுக்கள் நடப் பட உள்ளன. இந்நடுகைகள் யாவும் விவசாய சம்மேளனங் களின் ஊடாகவே நடத்தப் பட இருக்கின்றன·ஒரு இலட் சத்துஇருபதாயிரமதென்னை நாற்றுக்கள் மொத்தமாக நடப்படும்.இத்தென்னை மர நடுகையின் நோக்கம் யுத்த அனர்த்தத்தின் அழிவுகளை ஈடு செய்வதாகும்.

**விவசாயக்கருத்தரங்கு**

100 நாள்அபிவிருத்தித்திட்டத்தின் இரண்டாவதுநிகழ்ச்சி விவசாயம் சார் கருத்தரங்காகும் இதற்கு விவசாயத்துறை சார்ந்த 50 பேர் தெரிவு செய் யப்படுவர் இவர்களுக்கு கம நலசேவை நிலைய அதிகாரி கள், பல்கலைக்கழக விவசா யத்துறை விரிவுரையாளர்களி னால் கருத்தரங்கு நடத்தப் படும்.இக்கருத்தரங்கின் முத லாம் சுற்று மார்ச் மாதத்தி லும்,இரண்டாம் சுற்று ஏப் ரல் மாதத்திலும் நடத்தப்பட விருக்கின்றன.

**நீர் இறைக்கும் இயந்திரங்கள்**

அடுத்த திட்டமாக சுழற்சி முறைக் கடன் அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கல்திட்டம். இது தான் நிறுவனத்தின் நிதி உதவியு டன் செயற்படுத்தப்படவுள் ளது. நீர் இறைக்கும் இயந் திரம் அற்ற விவசாயிகளுக்கு 320 'வில்லியஸ்' இயந்திர மும் கொள்வனவு செய்யப் பட்டு 125 'றொபின்' இயந் திரமும் கொள்வனவு செய் யப்பட்டு இங்கு தவணைக் கடன் திட்டத்தின்கீழ் வழங் கப்படும் இத்திட்டம் மிக விரைவில் நடைமுறைப்படுத் தப்படவுள்ளது..

**விவசாய ஓய்வூதியம்**

100 நாள் நிகழ்ச்சித்திட் டத்தின் நிகழ்ச்சியாக விவ சாயிகளின் ஓய்வூதியத்திட் டம் விஸ்தரிப்பு செய்யப்பட வுள்ளது1989ம் ஆண்டு இத் திட்டத்தின்கீழ்6700பேர்உள் வாங்கப்பட்டனர். இவர்களு க்கு1000 ரூபாவிற்கு குறை யாதவருமானம்ஓய்வூதியமாச கிடைக்கின்றது. இந்த ஓய்வூ தியத்திட்டத்தின்கீழ் மேலும் 500 விவசாயிகள் புதிதாகச் சேர்க்கப்படவுள்ளனர். இத் திட்டத்தினால் விவசாயி களின் ஏழ்மையைப்போக்க வும், மேலும் விவசாயத்தில் ஈடுபாட்டை அதிகரிக்கவும் முடியும் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த வருடம் பெய்த கடும் மழையால் நெற்பயிர் செய்கையாளர்கள் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளனர், இது சம்பந்தமாக விபரங் களைத் திரட்டுவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடை பெற்று வருகின்றன. இவ் விபரங்களை விவசாய சம்மே ளனங்கள் மேற்கொண்டுவரு கின்றன.

எனவே இந்த சம்மேளனங் கள் விபரங்களில் பெரும்பகு தியை திரட்டிவிட்டன என எதிர்பார்க்கப் படுகின்றது எனவேஇந்த விபரங்களை பெப்ரவரி முடிவதற்கு முன் கமநலசேவைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் இவ்வாறு பெற்ற தகவல்களை உதவிப் பணிப்பாளர் 01-03-2002 அன்று அமைச்சுக்கு அனுப்பி வைப்பார் அதன்பின்னர் நட்டஈடுவழங்குவது பற்றிதீர் மானிக்கப்படுகிறது.

**குளங்கள் புனரமைப்பு**

யாழ்ப்பாணத்தில் காணப் படும் 10(பெரிய,சிறிய)குளங் கள் சிரமதான அடிப்படையில் திருத்தப்பட்டு புனரமைப்பு செய்யப்பட இருக்கின்றன ஏப்ரல் மாதத்திற்குபின் இக் 16குளங்களையும் சிரமதான அடிப்படையில் சிலநிறுவனங் களின் உதவியையும் பெற்று மேற்கொள்ளப்பட இருக்கின் றது.

**உப உணவு உற்பத்தி**

சிறுதானிய உற்பத்திகளை மேம்படுத்துவதற்காககௌபி, பயறு,நிலக்கடலை,எள் என் பன கொண்டுவரப்பட்டுள் ளன இவற்றை கமநலசே வைத் திணைக்களத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள லாம் இதற்கென கமநலசே வைத்திணைக்களம் ஒருலட் சத்துஅறுபதினாயிரம் ரூபா பணத்தை ஒதுக்கிஇருந்தது குறிப்பிடத்தக்கதாகும் இவற் றுடன் வதிவிடவேளாண்மை சம்மந்தமான திட்டங்களும் தற்போது கமநலசேவைத் திணைக்களத்தால்தயாரிக்கப் பட்டுள்ளது 100நாள்அபி விருத்திதிட்டத்துடன் வதி விடவேளாண்மையும்சேர்த்து நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது,மேற்படிநிகழ்ச் சித் திட்டங்களிற் பெரும் பகுதி பூர்த்தி செய்யப்பட வுள்ளதாக கமநலசேவைத் திணைக்கள உதவிப்பணிப்பா ளர் அறிவித்துள்ளது குறிப் பிடத்தக்கதாகும். ●

## நாகர்கோவில் ஆலயத்தில் மீண்டும் பூசை

(மந்திகை)

இராணுவ நடவடிக்கை யால் கடந்த இரண்டு வரு டங்களாகப் பூசைகள் நடை பெறாதிருந்த நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி பூசைகளை மீண்டும் நடத்து வதற்கான ஏற்பாடுகள் செய் யப்பட்டு வருவதாகத் தெரி விக்கப்படுகிறது. (எ-23)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட ஒருங்கி ணைப்புக்குழுக்கூட்டம் எதிர் வரும் 28 ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்கு யாழ். அரச செயலகத்தில் நடைபெற வுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்று கின்றனர் எனத் தெரியவரு கின்றது. (செ-77)

## மெய்வல்லுநர் திறனாய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று பிற்பகல் 1-30 மணிக்கு வித்தியாலயத்தின் புதிய விளையாட்டு மைதா னத்தில் அதிபர் செல்வி பா. மார்க்கண்டு தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நல் லூர் பிரதேச செயலர் நா. வேதநாயகனும்,சிறப்பு விருந் னராக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி. கதிர்காமநாதனும் கலந்து கொள்வார்கள். (வ)

## கொழும்புத்துறையில் மீளக்குடியமர்ந்தோர் அவசர வேண்டுகோள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதி யில் மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டுள் ளதையடுத்து அப்பகுதிமக்கள் தங்களுக்கு அடிப்படை வசதி களை ஒழுங்கமைத்துத் தரு மாறு யாழ். மாநகர சபை யிடம் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

அப்பகுதி வீதிகளை துப் பரவு செய்தல், வீதிகளைத் திருத்தி உதவுதல், குடிநீர் வசதிகளைச் செய்து கொடுத் தல், சுகாதார நடவடிக்கை களை மேற்கொள்ளல் போன்ற அத்தியாவசிய வசதி களை உடனடியாக செய்து தந்து தங்களது மீளக்குடிய மர்வுக்கு வழிகோலுமாறும் வேண்டுகோள் விடுத்துள் ளனர்

சுவாமியார் வீதி, சுவாமி யார் லேன், வளன்புரம், இலந்தைக்குளம்வீதி, ஆனந் தன்வடலிவீதி ஆகிய பகுதி களைச்சேர்ந்த மக்களே கூட் டாகஇந்த வேண்டுகோளை விடுத்து ளனர்.

இது சம்பந்தமாக அப்பகுதி யிலுள்ள இந்து சமய அமைப் பொன்று அண்மையில் யாழ். மாநகரமேயர் செல்லன் கந்தையனுடன் தொடர்பு கொண்டு கோரிக்கை விடுத் திருந்ததும் இங்கு குறிப்பிடத் தக்கது. (க-223)

## மக்கள் மீளக்குடியமரும் நடவடிக்கை மும்முரம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதி யில் மக்கள் மீளக்குடியமர அனுமதி அளிக்கப்பட்டுள்ள தையடுத்து,அப்பகுதி மக்கள் வளவுகளைச் சுத்தம் செய்வதி லும் வீடுகளைச் சீர்திருத்தும் நடவடிக்கைகளிலும்ஈடுபட்டு வருவதனைக் காணக்கூடிய தாகவுள்ளது.

2000ஆம் ஆண்டில் ஏற் பட்ட இடப்பெயர்வின் பின் னர் தமது வாழ்விடங்களை விட்டுவெளியேறிய மக்கள் முதற்தடவையாகவீடுகளைப் பார்வையிட்டு, அனர்த்தங்க ளினால் சேதமடைந்துபோ யுள்ள தங்களின் வீடுகளை மீளஒழுங்கமைப்பதிலும் கிண றுகளை இறைத்து சுத்தப்ப டுத்துவதிலும் ஈடுபட்டுவரு கின்றனர்.

சுவாமியார்வீதி,இலந்தைக் குளம் வீதி சுவாமியார் லேன் வளன்புரம், ஆனந்தன்வடலி வீதி ஆகிய பகுதி மக்களே இவ்வாறு மீளக்குடியமரக் கூடிய வசதியான நிலைக்கு தங்கள் வீடுகளை ஒழுங்கு படுத்தி வருகின்றனர். (செ-223)

## கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள் வெளியாகின

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங் களுக்கிடையே நடைபெற்ற இவ்வாண்டுக்கான (2002) போட்டி முடிவுகளின் விபரம் வெளியாகியுள்ளது.

**உதைபந்தாட்டம்**

1ம்இடம்: சென். றோக்ஸ் வி. க.

2ம்இடம்:பாசையூர் சென். அன்ரனீஸ்

**கிரிக்கெட்**

1ம் இடம்: சென்றோக்ஸ் வி. க.

2ம் இடம்: குருநகர் ச. ச. நிலையம்

**கரப்பந்தாட்டம்**

1ம் இடம்: பாசையூர் சென் அன்ரனீஸ் வி. க.

2ம் இடம்: கொழும்புத் துறை ஜெற்லைனர்ஸ் வி. க.

**எல்லே ஆண்கள்**

1ம் இடம்: குருநகர் ச. ச. நிலையம்

2ம் இடம்: சென்றோக்ஸ் வி. க.

இறுதி ஆட்டங்கள் துரை யப்பா விளையாட்டரங் கிலும், மத்தியகல்லூரி விளை யாட்டரங்கிலும் நடை நடைபெற்றன. (க-223)

## வீதித்தடைகள் அகற்றப்பட்டன

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை சுவாமி யார் வீதியில் போடப்பட்டி ருந்த வீதித்தடைகள் அகற் றப்பட்டு மக்களின் போக்கு வரத்திற்காக அவ் வீதி திறந் துவிடப்பட்டுள்ளது.

கடந்த இருவருட காலமாக இவ்வீதி, மக்களின்பாவனைக் குத் தடைசெய்யப்பட்டிருந் ததும் தெரிந்ததே.

இதேவேளை, இலந்தைக் குளம் புளியடிச்சந்தியில் நிறு வப்பட்டிருந்த காவலரணும் படையினரால் அகற்றப்பட் டுள்ளது. (செ-223)

### சாவகச்சேரி நவீன சந்தை

## துப்பரவுப் பணியில் தொண்டர்கள் ஈடுபாடு

### பிரமுகர்கள் பலரும் சமுகம்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இடம் பெற்ற யுத்தத்தின் போது சேதமடைந்த சாவகச்சேரி நவீன சந்தையையும் சாவகச் சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற் பனை நிலையத்தையும் சாவ கச்சேரி கைத்தொழில் வணி கர் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்றையதினம்300 க்குமேற் பட்டவர்கள் சிரமதானம் மூலம் துப்பரவு செயதனர்.

இச்சிரமதானப் பணியின் போது தமிழர் கூட்டமைப் பின்யாழ்.மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, நட ராஜா ரவிராஜ், ஈ.பி.டி.பி. யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான கே.வி.குகேந் திரன், ஈ.பி.ஆர்.எல் எவ் வரதர் அணியின் யாழ்மாவட டப் பொறுப்பாளர் த. சுபத் திரன், சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா, நகரசபைச் செயலாளர்எம்.எஸ். சரவண பவ,கோப்பாய் பிரதேசசெய லர் க.கேதீஸ்வரன்பச்சிலைப் பள்ளி, சாவகச்சேரி பிரதேச சபைகளின் செயலாளர் ஆகி யோரும் பங்குபற்றியிருந்த னர்.

நவீனசந்தையின்துப்பரவுப் பணிக்குவேண்டிய ஒத்துழைப் பினை மேஜர் வசந்தயப்பா மற்றும் 521 படையணியின் சிவில் நிர்வாகஅதிகாரிமேஜர் லக்ஸ்மன் குணசிங்கா ஆகி யோர்வழங்கியிருந்தமைகுறிப் பிடத்தக்கதாகும்.

அத்துடன் இச்சிரமதானப் பணியில் அறவழிப் போராட் டக் குழு,இலங்கை செஞ்சிலு வைச் சங்கம், தென்மராட்சி மக்கள் நலன் சேவைச்சங்கம் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஈ.பி.ஆர். எல்.எவ்.(வரதர்அணி)ஈ.பி. டி.பி. புளொட், ரெலோ, சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி நகரசபைஉட்பட பல நிறுவனங்களும் பங்குபற் றியிருந்தமை குறிப்பிடத்தக்க தாகும். (க-77)

## மர்மப்பொருள் வெடித்து வயோதிபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தேனீர் தயாரிப்பதற்கு அடுப்பைமூட்டிய போது மர் மப் பொருள் வெடித்துவயோ திபர் ஒருவர் படுகாயமடை ந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலை யில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 7.30மணியள வில் இடம்பெற்ற இச்சம்ப வத்தில் யாழ்ப்பாணம்புட்டுச் ந்தி ஒழுங்கையைச் சேர்ந்த இராமசாமி லோகநாதன் (வயது 65)என்பவரே காய மடைந்தவராவர்.

விறகினுள் மறைந்திருந்த மர்மப் பொருளே வெடித் திருக்கலாமென தெரியவரு கிறது. (இ-10)

# இன்று ஒரு தகவல்

## பாட்டும், பரிசளிப்பும்

அந்தக்காலத்து மன்னர்களுக்கெல்லாம் மிகவும் தாராள மனது சார்! என்றார் ஒருவர். 'எப்படிச் சார் சொல்கிறீர்கள்?' என்று அவரிடம் கேட்டேன். 'சும்மா ஒரு பாட்டு எழுதிக்கொண்டு போய்ப் படித்துக்காட்டினாற் கூட பொன்னும், பொருளுமாக வாரிக் கொடுத்திருக்கிறார்கள் சார்!' என்றார். 'இப்போதும் கவிதை எழுதுகிறவர்களுக்கு பொற்கிழி வழங்குகிறார்கள், பட்டம் கொடுக்கிறார்கள் எல்லாம் செய்கிறார்களே' என்றேன். எல்லாம் செய்கிறார்கள் சரி, ஆனால்எனக்குயாரும் செய்ய மாட்டேன் என்கிறார்களே!' என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டார் அவர். 'கவலைப் படாதீர்கள்! உங்களுக்கும் ஒரு காலம் வரும்' என்று அவருக்கு ஆறுதல் சொன்னேன்.

அவரை உட்காரவைத்து எனக்குத் தெரிந்த கதை ஒன்றைச் சொன்னேன். அந்தக் காலத்தில் ஒரு இராஜா இருந்தார். அரசு கட்டிலில் உட்கார்ந்திருந்தார். அந்தச் சமயத்தில் ஒரு கவிஞர் அவரைத் தேடி வந்தார். மன்னரைப் புகழ்ந்துபாட ஆரம்பித்தார். ஒரே ஒரு பாட்டுத்தான் பாடினார். அதைக்கேட்டவுடன், அந்த இராஜா டக்கென்று எழுந்து தெற்கு முகமாகத் திரும்பி உட்கார்ந்து கொண்டார். அதைப்பார்த்தவுடன் பாட்டுப் பாடிய கவிஞருக்குக் கொஞ்சம் வருத்தமாய்ப் போனது. 'என்ன இது, நமது பாட்டைக் கேட்டவுடன் கிழக்கு முகமாக உட்கார்ந்திருந்த இராஜா முகத்தைத் திருப்பிக்கொண்டு தெற்கே பார்த்து உட்கார்ந்து கொண்டாரே!' என்று நினைத்தார். இருந்தாலும் அந்தக் கவிஞர் விடவில்லை, இவரும் சுற்றிக் கொண்டு போய் மறுபடியும் அவர் முன்னால் நின்றார்.

அங்குபோய் நின்று இன்னொரு பாட்டை எடுத்து விட்டார். இராஜா பார்த்தார். பேசாமல் மறுபடியும் எழுந்து மேற்குப் புறமாகத் திரும்பி உட்கார்ந்து கொண்டார். இந்தப் புலவர் அப்போதும் விடுகிற மாதிரி இல்லை! மறுபடியும் சுற்றிக் கொண்டு அவர் முன்னால் போய் நின்றார். இன்னொரு பாட்டைப் பாடினார். இதற்காவது ஏதாவது பரிசு கிடைக்காதா? என்கிற நினைப்பில். இராஜா பார்த்தார். கம்மென்று எழுந்து உள்ளே போய்விட்டார். சபை கலைந்துவிட்டது! இராஜாவே எழுந்து உள்ளே போன பின்னர் மற்றவர்களுக்கு அங்கே என்ன வேலை? எல்லோரும் போய்விட்டார்கள். புலவர் மட்டும் நின்று கொண்டிருந்தார். அவருக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டே அரண்மனையை விட்டு வெளியே வந்தார். அந்தச் சமயத்தில் எங்கேயோ போயிருந்த அமைச்சர் உள்ளே வந்து கொண்டிருந்தார். வாசலில் புலவரைக் கண்டார்.

என்ன கவிஞரே! எனக்குக் கொஞ்சம் வெளியில் வேலை இருந்தது... அதனால் அரசசபைக்கு இன்றைக்கு வர முடியவில்லை. உங்கள் பாட்டையும் கேட்கமுடியவில்லை. அது சரி... இராஜா என்ன பரிசு கொடுத்தார்? என்று கேட்டார். 'அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்?' என்று ஆரம்பித்து அரண்மனையில் நடந்ததை அப்படியே சொல்லி முடித்தார் புலவர். அமைச்சர் அதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டார் சரி புலவரே! அரசர் உமக்குக் கொடுத்ததை இப்போது நான் விலைகொடுத்து வாங்கிக் கொள்கிறேன். இந்தாருங்கள்! ஆயிரம் பொன் என்றார். புலவருக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த அமைச்சருக்குப் புத்தி சுவாதீனம் சரியாக இல்லைப் போலிருக்கிறது என்று முடிவு செய்தார்.

சரி! வருகிறதை ஏன் விடுவான் என்று நினைத்து அவர் கொடுத்த ஆயிரம் பொன்னை வாங்கிக் கொண்டு வேகமாக அந்த இடத்தைக் காலி செய்தார். அவருக்குப் புத்தி தெளிந்து மறுபடியும் கொடுத்ததைத் திருப்பி வாங்கிவிட்டால் என்ன செய்வதென்ற பயம். இது இப்படி இருக்க அந்தப்புரத்திலே இராஜா சோர்வாக இருந்தார். இராணி வந்து என்ன விசயம் என்று விசாரித்தார். அதற்கு இராஜா 'இன்றைக்கு அரசசபைக்கு ஒரு பெரிய கவிஞர் வந்தார். நான் கிழக்கு முகமாக உட்கார்ந்திருந்தேன். என்னைப் பார்த்து ஒரு கவி பாடினார். மிகவும் உயர்ந்த கவிதையாக இருந்தது. அதனால் கிழக்குத் திசையில் உள்ள நமது இராச்சியம் முழுவதும் அவருக்குப் பரிசாகக் கொடுத்துவிட்டேன். அவருக்கென்று ஆகிவிட்ட இராச்சியத்தை இனி மேல் நான் பார்க்கக்கூடாதென்று நினைத்துத் தெற்கே திரும்பி உட்கார்ந்தேன். அங்கேயும் வந்து பாடினார். அதையும் கொடுத்து விட்டேன் இப்படி எல்லா இராச்சியத்தையும் அவருக்குக் கொடுத்து விட்டேன். இனிமேல் நாம் இங்கு இருப்பது சரியில்லை. புறப்படு தபோவனத்திற்குப் போய் விடுவோம் என்றார் இராஜா.

இராணியும் புறப்பட ஆரம்பித்தார். அந்தச் சமயத்தில் அமைச்சர் அங்கே வந்தார், 'அரசே- இந்த சாம்ராஜ்யப் பொறுப்பு உங்களைவிட்டுப் போய் விடவில்லை. நீங்கள் அந்தப் புலவருக்குக் கொடுத்ததை நான் ஆயிரம் பொன் விலை கொடுத்து நமக்கே திருப்பிவாங்கிவிட்டேன்' என்று விபரத்தைச் சொன்னார். அதன் பின்னர் இந்த இராஜா மறுபடியும் சிறப்பாக ஆட்சி செய்தார். அப்படியென்று இந்தக் கதையை என் முன்னால் உட்கார்ந்திருக்கிற இந்தக் காலக் கவிஞரிடம் சொன்னேன். இதைக் கேட்டவுடனே அவர் துள்ளிக்குதித்தார். இப்போது தான் சார் எனக்கும் விபரம் புரிகிறது என்றார். என்ன விஷயம் என்று விசாரித்தேன். அதற்கு அவர், 'சார் . . . நான் நேற்று ஒரு சினிமா இசை அமைப்பாளரிடம் போய் நான் எழுதிய பாட்டைப் படித்துக் காட்டினேன். அவரும் இப்படித் தான் சார், முதலில் கிழக்கு முகமாக உட்கார்ந்து ஆர்மோனியம் வாசித்துக் கொண்டிருந்தார். என் பாட்டைக் கேட்டவுடன் மேற்கு முகமாக திரும்பி உட்கார்ந்து விட்டார். இதற்கு என்ன அர்த்தமாக இருக்கும்? என்றார்.

'அதற்கு என்ன அர்த்தம்? என்று நானே இந்த இசை அமைப்பாளரிடம் கேட்டுச் சொல்கிறேன். கவலைப்படாதீர்கள்' என்று சொல்லி விட்டு நானே புறப்பட்டுப் போனேன். அந்த இசையமைப்பாளரைப் பார்த்தேன். ஆர்மோனியமும் கையுமாக உட்கார்ந்திருந்தார். சார் . . . உங்களிடம் அந்தக் கவிஞர் வந்து தன்னுடைய பாட்டைப் படித்துக் காட்டிய போது நீங்கள் பின்புறமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு உட்கார்ந்தீர்களாமே, அதற்கு என்னசார் அர்த்தம் என்றேன், அவர் கோபமாக என்னை முறைத்துப் பார்த்துவிட்டு, அந்த ஆளின்முகத்தில் மறுபடியும் நான் விழிப்பதற்கு ஆசைப்படவில்லை என்று அர்த்தம் என்றார்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

---

### குட்டியப்புலம் அ. த. க. பாடசாலைக்கு

# சிறந்த ஒரு பாதையை அமைக்க கட்டாயம் பாடுபடுவேன்

### முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமகாராசா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குட்டியப்புலம் அ. த. க. பாடசாலை மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் குறைந்த வளங்களுடன் சிறப்பான முறையில் செயற்பட்டு வருவதனை நான் நன்கு அறிவேன் இப்பாடசாலைக்கு சீரான போக்கு வரத்துப்பாதை இல்லாமல் இங்கு கல்வி புகட்ட வரும் ஆசிரியர்கள், மாணவர்கள் பெரிதும் இன்னலுறுகின்றனர். இது விடயம் தொடர்பாக நான் சார்ந்த கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் சீரான பாதை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைமேற் கொள்வேன்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க முன்னாள் தலைவருமான சி. சிவமகாராசா, குட்டியப்புலம்அ.த.க.பாடசாலையில் அண்மையில்இடம்பெற்றவருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போதுகௌரவ விருந்தினராககலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிபர் செ. கந்தசாமி மேற்படி தனது தலைமையுரையில், இப் பாடசாலையின் கல்வித் தர உயர்விற்கு இப் பகுதி பெற்றோர் கூடிய பங்களிப்பை நல்கவேண்டும் என்றார்.

பிரதம விருந்தினராக கலந்து சிறப்புரையாற்றிய தெல்லிப்பழை கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் கா. சந்திரபாலன் தனது உரையின் போது, குறுகிய கால பயிற்சியுடன், குறைந்த வளங்களுடன் நிறைந்தஒரு இல்ல மெய்வல்லுநர் நிகழ்வை வழங்கிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள்.

இப்பாடசாலை குறைந்த ஆசிரியர் வளங்களுடன்செயற்பட்டு வருகின்றது. சந்தர்ப்பம் வாய்க்கும் போது ஆசிரியர் வளத்தை அதிகரிப்பதற்கு என்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்வேன் ;என்றார்.

வலிகாமம் வலயம்சேவைக்கால ஆலோசகர் திருமதி இ. இராமலிங்கம், இளைப்பாறிய ஆசிரியர் சு. செல்லப்பா, யாழ். வயாவிளான் முன்னாள் அதிபர் ஆ.சி. நடராசா உட்பட பிரமுகர்கள்பலர்உரையாற்றினர். (க)

---

# விடுதலைப்புலிகள்-அரசு பேச்சு விரைவில் ஆரம்பமாகும்

### ஜப்பானிய அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை அடுத்து நிரந்தர யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு பேச்சு வார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகும்.

ஜப்பானிய தூதரக தகவல் துறைப்பணிப்பாளர் சநாறியே நட்டோரி மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; இரண்டு தரப்பினரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செவ்வனே அனுசரிப்பார்கள். அதன் வழி சமாதானப் பேச்சுக்களுக்கு உகந்த சூழ் நிலை விரைவில் உருவாக்கப்படும்.

இதேவேளையில் இலங்கையின் ஐக்கியம், இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு ஆகியவற்றை உறுதி செய்யக்கூடிய சமாதான நடவடிக்கைகளையும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தும் என்று இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. (க)

---

## அனுமதி இல்லை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தீவுப்பகுதிக்குச் செல்வதற்கு இங்குள்ள சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

இதன் காரணமாக தீவுப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிப் பொருட்கள் சென்றடையவில்லை எனவும் அறியப்படுகின்றது.

இதுவிடயம் குறித்து தீவுப் பகுதியில் உள்ள பொது அமைப்புகள், மேற்படி அமைப்புகளுடன் தொடர்பு கொண்ட போதே தமக்கான அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை எனத் தெரி வித்துள்ளன. (க.77)

---

## மகாநாயக்க தேரருடன் முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் பிரதிநிதிகளுக்கும் மலவத்தபீடமகாநாயக்க தேரருக்கும்இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

அமைச்சரவை பேச்சாளர் ஜீ. எல். பீரிஸ் தலைமையில் சென்ற குழுவினர் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட நிரந்தர போர்நிறுத்த உடன் படிக்கை குறித்த அம்சங்கள் பற்றிஇச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது. (க-4)

---

### தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில்

## மனநோயாளருக்கான மருந்து தட்டுப்பாடு

(தென்மராட்சி)

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் மனநோயாளர்களுக்கான மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிய வருகின்றது.

இங்கு செரனேஸ்ஃபூளுப் பென்சிகள்கோல் ஓராப், ஆர்ப்டேன் போன்ற மருந்துகள் கடந்த சில மாதங்களாக இல்லாமல் இருந்துவருவதால் மனநோயாளர்களுக்கு உரிய வகையில் சிகிச்சை அளிப்பதில் வைத்தியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இத்தகைய மருந்துகளுக்கான தட்டுப்பாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரையும் தொடரும் என வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

குடாநாட்டிலுள்ள அரசவைத்தியசாலைகளுக்கு தாமதமின்றியும், தட்டுப்பாடின்றியும் மருந்துவகைகள் அனுப்பிவைக்கப்படும் என அரசுதரப்பில் உறுதிமொழிகள் பகரப்பட்டும் கூட, இன்றும் இந்த நிலை காணப்படுவது குறித்து பொதுமக்கள் மிகுந்த அதிருப்தி தெரிவித்துள்ளனர். (செ-77)

---

## ஆலயம் புனரமைப்பு

(மானிப்பாய்)

நவாலி வடக்கு ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம் கடந்த 18 வருடங்களுக்குப் பின்னர், 3 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மீள் புனரமைப்புப் பணிகளை நவாலி அட்டகிரி ஆலயக் குருக்கள் பிரம்மஸ்ரீ து. பால சுப்பிரமணிய சர்மா மேற்கொண்டுவருகிறார். (க-232)

---

## சிந்தனைக்கு விருந்து

### குழந்தைக்குத் தோற்றிய உடை

'மடையர்க்குத் தோன்றா மற்றவர் காண்பர்
மாண்புசேர் புத்துடை' என்றே
தடையறக் கூறித் தங்களின் வேந்தைச்
சற்றுமோர் உடைஅணி யாமல்
படைபரி வாரம் சூழவே பவனி
விட்டனர் எவருமே அவனை
'உடையிலன்' என்னார் ஆயினோர் குழந்தை
உரைத்தது 'நிர்வாணி' என்றே!

- 'பழையவன்'

### அவுஸ்திரேலிய வான் பரப்பில்

# அத்து மீறி நுழையும் விமானங்களை உடன் சுட்டு வீழ்த்தவும்

## வான் படைக்கு அவசர உத்தரவு

(சிட்னி)

மார்ச் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டின் போது சந்தேகத்திற்கிடமானமுறையில் அந்த வான் பரப்பில் நுழையும் விமானங்களை சுட்டு வீழ்த்தும் படி அவுஸ்திரேலிய அரசு அதன் வான்படைக்கு உத்தரவிட்டுள்ளது.

மகாநாடு நடைபெறும் குயின்ஸ்லாந்துப் பகுதி 25 கடல் மைல்சுற்றளவை இன்று முதல் அபாய வலயமாகப் பிரகடனப்படுத்துகிறது. இவ் வான்பரப்பில் எவ்.எ 18 ரக யுத்த விமானங்கள் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவில் நிகழ்ந்தது போன்ற எந்தவொருசம்பவம் நிகழ்ந்தாலும் அதனை முறியடிப்பதற்கு வசதியாகவே இவ் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-03)

# உலக தரிசனம்

### அமெரிக்க பத்திரிகையாளர் கொலை

## சம்பந்தப்பட்டோரை உடன் கைது செய்க

## பாக். அதிபர் உத்தரவு

(இஸ்லாமாபாத்)

அமெரிக்கப் பத்திரிகையாளரான டானியல் பேளை கொடூரமாக படுகொலை செய்த பயங்கரவாத கும்பல்களிலுள்ள ஒவ்வொருவரையும் உடனடியாக கைதுசெய்யுமாறு பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ்முஸாரப் உத்தரவிட்டுள்ளார்.

இந்த கொலை குறித்து தனது மனவருத்தத்தைத் தெரிவித்த பாகிஸ்தான் ஜனாதிபதி பயங்கரவாத கும்பல்களின் அடாவடித்தனங்களை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யுமாறு இராணுவத்தினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் நம்பிக்கையுடன் தொடர்த்தும் முன்னேறப் போவதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதல்களை கடுமையாக எதிர்த்துவந்த பாகிஸ்தானின் இஸ்லாமிய கட்சிகளும் இந்த படுகொலைக்கு தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. (க-5)

### கிளர்ச்சித் தலைவர்

## பலி

(ஜொகன்னர்ஸ்பேக்)

ஆபிரிக்காவில் நீண்ட காலமாக சிவில் யுத்தத்தைநடத்தி வந்த யூனிற்றா கிளர்ச்சிக் குழுவின் தலைவர் ஜனால் சபிலி(வயது-67)உயிரிழந்துள்ளார்.

ஆபிரிக்க அரசாங்க துருப்புக்களிற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும இடையே நடைபெற்ற போரின் போது இவர் உயிரிழந்துள்ளார் என அரசாங்கம் கூறுகின்றது.

ஜனால்சபிலி உயிரிழந்ததை அறிந்த அங்கோலா மக்கள், அங்கோல போர் முடிவுக்கு வருவதற்கான வழிபிறந்துள்ளது என்ற நம்பிக்கையுடன் பட்டாசுகளை கொளுத்தி ஆரவாரம் செய்து வருகின்றனர்.

இவரின் தலைமையின்கீழும் வழிநடத்தலின் கீழும் நடத்தப்பட்ட போர்களின் போது 10 இலட்சம் மக்கள்கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

## சவூதி இளவரசரின் யோசனைகள்பயனுள்ளவை

(ரியாத்)

அரேபியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையில் நடைபெற்று வரும் போர் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள சூழ்நிலையில் சவூதி இளவரசர் அப்துல்லாவினால் முன்வைக்கப்பட்ட யோசனை ஆனது ஒரு ஆக்கபூர்வமான வரவேற்கத்தக்க விடயமாகும் என ஐக்கிய நாடுகள் [illegible] அனான் தெரிவித்துள்ளார்.

16 மாதங்களாக நடைபெற்று வந்த மத்திய கிழக்கு யுத்தத்தின் போது கைப்பற்றிய அரேபிய நிலங்களிலிருந்து இஸ்ரேல் வாடஸ் பெறுமானால், அரேபிய நாடுகளுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்த இளவரசர் முன்னின்று உழைக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (க-08)

## பிரதமர் வாஜ்பாய் அவுஸ் விஜயம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அடுத்தமாதமளவில் அவுஸ்திரேலியா செல்லவுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தைமேற்கொள்ளும் பிரதமர் அங்கு

# விளையாட்டுச் செய்திகள்

### தெல்லிப்பளையில்

## இன்று

### கரப்பந்தாட்டம்

(ஏழாலை)

தெல்லிப்பளை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வந்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின்இறுதிப் போட்டிகள் இன்றுபி.ப 2.00மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் தெல்லிப்பளைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

15வயதின் கீழ் பிரிவில்; இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் எதிர் அருணோதயாகல்லூரி,

17வயதின் கீழ்ப்பிரிவில்; மகாஜனாக் கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி,

19வயதின் கீழ்ப் பிரிவில்; மகாஜனாக் கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி. இவ்இறுதிப் போட்டியில் முதன்மை விருந்தினராக வலிகாம வலயஉடற்கல்வி உதவிப்பணிப்பாளர் வி பாலசிங்கம்கலந்துகொள்ளவுள்ளார். (க-12)

### கரப்பந்தாட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்றுவரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30மணிக்கு மூன்றாம் இடத்துக்கான இறுதிப்போட்டி ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (க-79)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதிஇ.குமாரவடிவேல் பிரதமவிருந்தினராக கலந்துகொள்கிறார். (செ-9)

## கோப்பாயில்

### வலைப்பந்தாட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும்வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் நாளை காலை 8.30 மணிக்கு 15 வயதுப் பிரிவில், நடராஜ ராமலிங்க வித்.எதிர் கோப்பாய் மகா வித்,கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை,

17 வயதுப் பிரிவில்;

நாடராஜராமலிங்க வித் எதிர் அத்தியார் இந்துக்கல்லூரி, கோப்பாய்மகாவித்தியலாயம்எதிர்புனிததிரேசாள் மகளிர் கல்லூரி, புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு எதிர் இடைக்காடு மகா வித்தி.

19 வயதுப் பிரிவில்:

புனித திரேசாள் மகளிர் எதிர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி மைதானத்தில் இக்கழகங்கள் மோதவுள்ளன. (க-79)

### உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் அமரர் அ. தம்பிராசா ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி நாளைமறுதினம் புதன்கிழமை பி.ப 3.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அராலி பாரதி வி.க எதிர் இளவாலை யங் கென்றீஸ் வி.க. நவாலி சென்பீற்றர் வி.க.,எதிர்அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம். (க-3)

## 17-வது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி மே-31 இல் ஆரம்பமாகும்

வரவேற்கத்தக்க விடயமாகும் என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி

முன்னின்று உழைக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (க-08)

அவுஸ்திரேலியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தைமேற்கொள்ளும் பிரதமர் அங்கு இடம்பெறவுள்ள பொதுநலவாயஅமைப்புக்களின்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார். (க-07)

# மே-31 இல் ஆரம்பமாகும்

(டோக்கியோ)

பதினேழாவதுஉலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி ஜப்பானிலும் தென்கொரியாவிலும் எதிர்வரும் மே மாதம் 31 ஆம்திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியில் முப்பத்திரெண்டு நாடுகளில் இருந்து உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்காக வெளிநாடுகளில் இருந்துவரும் வீரர்களுக்கு விசேட பாதுகாப்புக்களை வழங்குவதற்கான முன்னேற்பாடுகளை இவ்விருநாடுகளும் இணைந்து மேற்கொள்கின்றன. (செ)

# ஹஜ் யாத்திரையின் போது அமெரிக்கா இஸ்ரேலை ஈரானியர் சபித்துகோஷம்

(தெஹ்ரான்)

சவூதி அரேபியாவின் மக்கா நகரில் ஹஜ் கடமைகளை மேற்கொள்ளச் சென்ற ஈரானிய யாத்திரிகர்கள் புனித அரபாத் மலைப் பயணத்தின் போது, அமெரிக்காவையும் இஸ்ரேலையும் சபித்துக் கோஷமெழுப்பியபடி சென்றனர்.

இலட்சோப இலட்சம் முஸ்லிம் யாத்திரிகர்கள் அலை அலையாக அரபாத் மலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் ஈரானிய யாத்திரிகர் பெருங்கூட்டம் 'இஸ்ரேல் அழிவதாக' அமெரிக்கா அழிவதாக' எனும் கோஷங்களை எழுப்பிச் சென்றனர்.

அமெரிக்கா, இஸ்ரேலுக்கு எதிரான ஏதாவது நிகழ்வுகள் இடம்பெறக்கூடுமென்று மிகவும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், ஈரானிய யாத்திரிகர்கள் மிகவும் தந்திரமான முறையில் ஆட்சேபத்தைத் தெரிவித்தனர். (செ)

## பாரதியாரின் . . .

ஆனால் தனது குருநாதரைக் கவிஞா மறந்தாரில்லை. 1940 லிருந்து கண்டு கொண்டிருந்த 'பாரதியார் வரலாறு' திரைப் படக்கனவுக்கு 1963ல்எழுத்து வடிவம்கொடுத்துமுடித்தார். அதாவது, திரைக்கதைவசனம் எழுதுவதுஎன்னும்'ஸ்கிரிப்ட்' வேலையை முடித்தார். எவ்வாறேனும் இம்முறை பாரதியார் வரலாறு படத்தைத் தயாரித்து விடுவது என்ற முயற்சிகளை மேற்கொண்டார். 1964, ஏப்ரல், 21 ம் திகதியுடன் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது. ஆம் அன்றைய தினம் சென்னை பொதுமருத்துவ மனையிலிருந்து தனது குரு நாதரைத் தேடிப்பாரதிதாசன் பயணத்தைத்தொடங்கினார்.

நன்றி
தினபூமி.97

# ஒஸாமா பின் லேடன் பயன்படுத்திய விமானம் ஆப்கானில் கண்டுபிடிப்பு

(காபூல்)

ஒஸாமா பின் லேடன் பாவித்து வந்த சிறிய ரக விமானம் ஒன்று ஆப்கானிஸ்தானில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இருவர் மட்டும் பயணம் செய்யக் கூடிய அதிவேகவிமானம் ஒன்றுமலைப் பகுதிகளின் இடையேஅமைக்கப்பட்டுள்ள நிலக்கீழ் விமான நிலையம் ஒன்றில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்குள் சிறியரக ஆயுதம் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விமானம் ஒஸாமா பின்லேடன் பாவித்ததாக தெரிவித்த புலனாய்வுப் பிரிவினர் அதனுள் பல நாட்டு மறைவிடங்களின் வரைபடங்கள் அடங்கிய கோப்பு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-07)

# சிம்பாவேயில் தொடரும் வன்செயல் சம்பவங்கள்

## ஜனாதிபதி தேர்தல் நிறுத்தப்படலாம்

(ஹராரே)

அடுத்த மாதம் சிம்பாவே நாட்டில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை ஒட்டி வன்முறைகளும், முறைகேடுகளும் அதிகரித்து வரும் நிலையில் அமெரிக்கஅரசுசிம்பாவே மீது கடும் தடைகளை விதித்துள்ளது.

சிம்பாவேயில் இடம்பெற்று வரும் வன்முறைகளுக்கு தற்போதைய அதிபர் முகாபே தான் என நம்பி வரும் அமெரிக்கா ஜனாதிபதி முகாபே உட்பட அவரது சகாக்கள் எவரும் அமெரிக்கா செல்ல முடியாது என தடை விதித்துள்ளது.

இதேவேளை, இந்த தடைகளை அகற்றும் வரையில் ஜனாதிபதித் தேர்தல் இடை நிறுத்தப்படும் என சிம்பாவே நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. (க-7)

இரப்பன் இரப்பாரைஎல்லாம்
இரப்பின்
கரப்பார் இரவன் மின் என்று
- குறள்

வலம்புரி

## புனரமைப்பு அவசியம்

யாழ். குடா நாட்டில் ஏற்பட்ட யுத்த அழிவுகளில் தென்மராட்சிப் பகுதி பாரிய சேதத்தைக் கண்டுள்ளது. அரச படைகளின் மல்ரி பரல் தாக்குதல் தென்மராட்சியில் உள்ள சகல கட்டடங்களையும், இயற்கை வழங்களையும் பதம்பார்த்துள்ளது. இதனால் யாழ்ப்பாணத்தின் சுய பொருளாதாரத்தில் முக்கிய பங்கை வகித்த தென்மராட்சி இன்று மயான பூமியாக இயற்கை வளத்தை இழந்த மண்ணாகக் காட்சி தருகிறது.

தென்மராட்சியில் ஏற்பட்ட யுத்த அழிவுகள், உயிரிழப்புகள் அப்பகுதி மக்களிடம் தீராத வடுவை ஏற்படுத்தி விட்டது. பாரிய அழிவுக்குள்ளான தென்மராட்சிப் பகுதியை புனரமைப்பதற்குத் தனியான திட்டங்கள் தயாரிப்பது மிக மிக அவசியமாகும். ஏற்பட்ட சேதங்கள் புனர்வாழ்வு அமைச்சுப் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், மனித நேய அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினால் முழுமையாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இதற்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு விசேடமாக நிதியை ஒதுக்கி உடைந்து போன அப்பிரதேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

அதேவேளை தென்மராட்சியின் சேதம் குறித்து தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிபேதமின்றிபாராளுமன்றத்தில்விசேட கவன ஈர்ப்புப் பிரேரணைகளைக் கொண்டுவரவேண்டும். அழிவுற்ற தென்மராட்சிப் பிரதேசம் உரிய முறையில் சீரமைக்கப்படவில்லையாயின் அதனால் ஏற்படப் போகும் விளைவுகள்பாரதூரமாகவே அமையும்.

அத்துடன் தென்மராட்சியில் மீண்டும் மீளக் குடியமர்வு இடம்பெற்று வருவதால் அங்கு சுகாதார சேவைகள் முடுக்கி விடப்பட வேண்டும். அங்கு விதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள், கண்ணிவெடிகள் பாதுகாப்பானமுறையில்அகற்றப்படுவது மிக மிக முக்கியமாகும். இதற்கு சர்வதேச மனிதநேயஅமைப்புகள் தமது பூரண பங்களிப்பை வழங்க வேண்டும். உடைந்து போன பாடசாலைகளைப் புனரமைப்பதும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும், அனைவரினதும் தலையாய கடமையாகும்.

# பாரதியாரின் வாழ்வைப் படமாக்க எண்ணிப் பரிதாபமான முடிவு கண்டார் பாரதிதாசன்

கலைமாமணி
**அறந்தை நாராயணன்**

தமிழில் பேசும் படங்கள் தோன்றிய காலம்முதல் அவற்றின்மீது கடுமையான விமர்சனம் செய்துகொண்டிருந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். 1936 ஆம் ஆண்டில் வெளிவந்த அவரது கவிதைகளின் முதற்தொகுப்பில் 'தமிழ் நாட்டிற்சினிமா' என்னும் தலைப்பிலான கவிதையில், என் தமிழர் படமெடுக்க ஆரம்பஞ்செய்தார். எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக! ஒன்றேனும் தமிழர் நடையுடைபாவனைகள் உள்ளதுவாய் அமைக்கவில்லை. உயிர் உள்ளதில்லை ஒன்றேனும் தமிழ்அருமை உணர்த்துவதாயில்லை. ஒன்றேனும் உயர்நோக்கம் அமைந்ததுவாயில்லை. ஒன்றேனும் உயர்நடிகர் வாய்ந்ததுவாயில்லை. ஒன்றேனும் வீழ்ந்தவரை எழுப்புவதாயில்லை என்றுள்ளது.

### இலக்கியத்தில் ஈடுபாடு

இவ்வளவு கடுமையான அபிப்பிராயம் கொண்டிருந்த பாரதிதாசனை தங்களது பாலாமணி (1937) படத்திற்கு பாடல்கள் எழுத டீ. கே. எஸ். சகோதரர்கள அழைத்துப் போனார்கள். சினிமாவுக்குப் பாடல்கள் எழுதுவதில் பாரதிதாசனுக்கு உற்சாகமில்லை. பாடல் எழுத உட்காருவார். உடனே ஏதாவது இலக்கியம் தொடர்பான உரையாடலில் ஈடுபடுவார். அதிலேயே மூழ்கிடுவார். பாடல்களைப்பற்றி யாராவது நினைவுபடுத்துவார்கள். 'அதுகிடக்குதப்பா எழுதினால் போச்சு!சினிமாப் பாட்டுத்தானே'! என்று சொல்லிவிட்டு மீண்டும் இலக்கிய உரையாடலைத்தொடங்குவார் என்று டீ. கே. சண்முகம் குறிப்பிடுவார்.

சினிமாப் பாடலாசிரியராகி விட்ட பாரதிதாசனிடம் கட்டுரைகேட்டுப்போனார் சினிமாப்பத்திரிகை ஆசிரியர் ஒருவர். 'பாட்டுஎழுது' என்னும் தலைப்பில் எழுதிக்கொடுத்தார். அதில் 'சினிமாவுக்குப் பாட்டுஎழுது. நாடகப்பாட்டு எழுது. பெருமைப்படு. ஊதியம் பெறு. பொதுமக்களை இன்பத்தில் சேர். சந்தோஷப்படு நீ பாட்டு எழுதுமுன்படி. இலக்கணம்படி. இலக்கியத்தைச் சுவைத்து உன்னை விசாலப்படுத்து. ஒன்றை அதன் சுற்றுக்கோடுவரைக்கும் ஆராய்ச்சி செய். சுருக்கமாகச்சொல். கேட்பவர்கட்கு விளக்கம் ஆகும்படி சித்திரம் செய். நீ எழுதிய வர்ணமெட்டுப் பாட்டை வாக்கியமாகப்பிரித்து, அவைகளை ஒன்றன் பின் ஒன்றாக எழுதிப்பார். சிறு சிறு முடிவாக இருக்கிறதா?-அர்த்த புஷ்டியுள்ளவையாக அந்தப் பதங்கள் இருக்கின்றனவா-வீண்வார்த்தைகள் இல்லாமல் இடம் நிறைந்திருக்கிறதாஎன்று பார்!' என்று குறிப்பிடுகிறார்.

கவிஞர் எழுதியது மிகப் பெரிய கட்டுரை, பாரதி தாசனின் இலக்கணப்படிதான் சினிமாப் பாடல் எழுதவேண்டும் என்ற சட்டம் வருமானால், இன்றைய பாடலாசிரியர் பலர்ஓடிப்போய் விடுவார்கள். (பாரதிதாசனின் இந்தக் கட்டுரை வெளியான பத்திரிகை ஸில்வர் ஸ்கிரீன் 19-3-1938), சினிமாவுக்கு எழுதத் தொடங்கியதால் 'இலக்கியவாதி' என்னும் கம்பீரத்தைப் பாரதிதாசன் இழந்ததில்லை. தமிழுக்கு கஞ்சி ஊற்றுகிறேன் என்று பேசியது மில்லை. பாலா மணிக்கு பிறகு ஸ்ரீராமனுஜர், அடுத்து களாமேகம் (1940) கதை,வசனம், பாடல்கள், அப்படித்தான் ஒப்பந்தம் செய்யப் பட்டது. படத்தின் இயக்குநர், எல்லீஸ் ஆர். டங்கன். இணை இயக்குநர் கவிஞரின் நண்பர் பி.எஸ்.செட்டியார்.

### விளம்பர விடயம்

நாளடைவில் பத்திரிகை விளம்பரங்களில் கதை, வசனம்- பி.எஸ். செட்டியார் என்று வெளிவரத் தொடங்கியது. புரட்சிக் கவிஞருக்கு பொல்லாத கோபம், செட்டியாரைக் கூப்பிடச் செட்டியார் வந்தார். ''என்ன பி. எஸ். செட்டி! உனக்குப் பல முறை சொல்லி விட்டேன். தொடர்ந்து அப்படியே விளம்பரம் வருகிறது. என் விஷயத்தில் ஜாக்கிரதையாக நடந்து கொள். ஏன் தெரியுமா?நான் புதுச்சேரிப் பேர் வழி, சுட்டு விடுவேன்,'' என்றார் பாரதிதாசன். அதன் பிறகு-கதை வசனம்- பாடல்கள்- பாரதிதாசன் என்றே விளம்பரங்கள் முறையாக வரத் தொடங்கின. (செய்தி ஆதாரம்-மன்னர்மன்னன் எழுதிய கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்).

சுதந்திரத்திற்குப் பின் திராவிடர் இயக்கத்தினர் திரைப் பிரவேசம் செய்த போது பாரதிதாசனின் தனிப்பாடல்கள் பலவற்றை அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர். திராவிடர் இயக்கத்தோடு தொடர்புடையவர்கள் எழுதினால் படங்கள் வெற்றி பெறும்- வசூலாகும் என்பதைப் புரிந்து கொண்டவர்களில் முதல்வர் மொடர்ன் தியேட்டர்ஸ் டீ.ஆர்.சுந்தரம். அவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனையும் பயன்படுத்திக் கொண்டார். சுபத்திரா, சுலோசனா, ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி படங்களுக்கு பாரதிதாசன்திரைக்கதை-வசனம் எழுதினார். நடைமுறையில் நம்ப முடியாத மந்திரமாய் அபூர்வ சிந்தாமணிக்கு பகுத்தறிவாளர்களான நாம் வசனம் எழுதலாமா? என்று திராவிட இயக்கத்தினர் வினா தொடுத்தனர்.

'பிராணநாதா, ஸ்வாமி, ஸகியே, தவசிரேஷ்டரே போன்ற சொற்களை நீக்கி அருந்தமிழில் 'அத்தான்' தோழி, குருவே! என்று அழைக்க வைக்கிறேன். இந்தத் தொடக்க நிலையில் இதைத்தான் செய்யமுடியும்' என்று பதில் தந்தார் பாரதிதாசன். பாரதிதாசனுக்குப் புகழ் தந்த படம் மொடர்ன் தியேட்டர்ஸ் 'பொன்முடி' (1950). அது அவரது 'எதிர் பாராத முத்தம்' குறுங்காப்பியத்தை தழுவியது. அடுத்த படம் வளையாபதியையும் (1952) மொடர்ன் தியேட்டர்ஸ் தான் தயாரித்தது. அதன் பிறகு எப்போதும் போல 'குயில்' பத்திரிகை, கவிதைகள், இலக்கியப்பணிகள்.

### நிறைவேறாத ஆசை ஒன்று


கவிஞரது வாழ்வில் நிறைவேறாத ஆசைகள் இரண்டு ஒன்று பாரதி வாழ்க்கையைப் படம் பிடிக்காதது தமிழ் நாட்டு அறிஞர்களின் தவறு என்று 1942 சக்தி மாத ஏட்டின் நவம்பர் இதழிலேயே வருந்தியவர் பாரதி தாசன். தனது குருநாதர்பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைப்படமாக்கும் முயற்சியில் நாற்பதாம்ஆண்டுகளிலேயே, நண்பர் விருநகர் சம்பந்தம்துணையோடு தொடங்கினார்பாரதிதாசன். கம்பெனியின் பெயர் குரு பிக்சர்ஸ் கோட்டையூர் செட்டியார் பண உதவி செய்வதாக வாக்களித்தார். பத்திரிகையில் விளம்பரம் வெளிவந்தது. பாரதியாராக நடிப்பதற்கு எஸ். எஸ். மாரிசாமியைப் பாரதிதாசன் கண்டுபிடித்தார். அப்போது செய்தி ஏடொன்றின் நிருபராக எஸ்.எஸ்.மாரிசாமி பணியாற்றிக் கொண்டிருந்தார். குரு பிக்சர்ஸ் பங்குதாரர்களுக்குள் குழப்பம். சிலர் காணாமல் போனார்கள். நிதி உதவியின்றிப் பாரதியார் வரலாற்றுப் படம் தயாரிக்கும் திட்டத்தைப் பாரதிதாசன் கைவிட நேர்ந்தது. (செய்திஆதாரம்: கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்-மன்னர் மன்னன்).

### இரண்டாவது ஆசை

அவரது காவியங்களில் 'பாண்டியன் பரிசு' புகழ்பெற்றது. 'அதைத்திரைப்படமாகத் தயாரித்தால் நானே கதாநாயகனாக நடிப்பதோடு நிதி உதவிக்கும் ஏற்பாடு செய்கிறேன்' என்று வாக்குறுதி கொடுத்தார் ஒருபிரபல நடிகர். நம்பினார் கவிஞர். 1961 ஆம் ஆண்டு சென்னை தியாகராயநகர், ராமன் தெருவில் ஒருபங்களாவை வாடகைக்குப் பிடித்துப் படக்கம்பெனியை ஆரம்பித்தார் கவிஞர். நடிகரை நம்பின கவிஞர் கைவிடப் பட்டார். அதே பங்களாவின் அவுட் ஹவுஸில்குடியிறங்கினார். பாண்டியன் பரிசு காவியத்தையும் அந்த நடிகரையும் மறந்தார்.

(8 ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்



### காயத்ரீ

ஓம் தத்ஸவிதுர் வரேண்யம் பர்கோதேவஸ்ய
தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்.

யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க்கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக.

அறிவைத் தீட்டுதற்கும், அதை வளர்ப்பதற்கும் காயத்ரீ தியானம், காயத்திரீ ஜபம் உற்ற உபாயம். எல்லாச் சமயத்துக்கும் இது பொதுவானது. உணர்ச்சியோடு கூடிய சூரியன் மனத்தின் கண் மிளிர்வதாக நினைப்பது இதன் கருத்து.

-ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (13)

**தவக்காலம் - இரண்டாம் வாரம் (ஊதா)**

**திபா 79:8-9,11,13. 'அவர் நம் பாவங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதில்லை, நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மைத் தண்டிப்பதில்லை'**

தீர்ப்பிடுதல், கண்டனம் செய்தல் மனித உறவுகளை முறிக்கும் செயல்களாகும். மனிதர்கள் பலவீனமானவர்கள் தான். பலவீனத்தால் பாவம் செய்யும்சூழ்நிலை ஏற்படும். அவர்களது தாழ்நிலையைப் பார்த்து நாமும் தீர்ப்பிட்டால், கண்டனம் செய்தால் அது மேலும் அவர்களைப் புண்படுத்தி எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும். மனித உறவுகள் மேம்படவேண்டுமெனில் மன்னிப்பு, கனிவோடு கொடுத்தலும் அவசியம். கடவுள் நம் பலவீனத்தைக் கண்டு தீர்ப்பிடவில்லைநம் பாவநிலை கண்டுகண்டனம்செய்யவில்லை. நம்மைமன்னித்தார்.

அவரது அருளும் அன்பும் அமுக்கி, குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து நம் இதயத்திடை செலுத்தப்பட்டன. இந்த அன்பின் தெய்வம் நாம் தீர்ப்பிடாதிருக்கவும். கண்டனம் செய்யாதிருக்கவும் பணிக்கிறார். தந்தையாம் கடவுள் இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல் நம்மையும் இரக்கமுள்ளவராய்இருக்க அழைக்கிறார். நமது அணுகு முறை இரக்கத்தின் அடிப்படையில் அமையட்டும்.

- காவலன்



சர்வமத சமாதானப் பாத யாத்திரை நேற்று இரண்டாவது நாளாக நல்லூர் முருகன் ஆலயப் பகுதியில் ஆரம்பமானபோது நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்குவதை படத்தில் காணலாம்.

### சமாதானத்தை...

பல்வேறு தரப்பட்டவர்களும் சமாதானமே தமது அடிப்படைத் தேவை என்பதை வெளிப்படுத்தும் வகையில் உணர்வு பூர்வமாக சமாதானப் பாதயாத்திரையில் ஈடுபட்டனர்.

நல்லூரில் இருந்து புறப்பட்ட யாத்திரிகர்கள், அரசடி வீதியூடாக கே.கே.எஸ் வீதியை அடைந்து அங்கிருந்து கொக்குவில், மருதனார்மடம், சுன்னாகம், மல்லாகம் சந்திகளைக் கடந்து தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தை மாலை சென்றடைந்தனர்.

இவர்களுடன் வடமராட்சி சமாதான யாத்திரிகர்களும் இணைந்து துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஒன்று கூடினர்.

துர்க்காதேவி தேவஸ்தானத்தை யாத்திரிகர்கள் சென்றடைந்ததும் அங்கு ஆலய முன்றலில் தீப ஆராதனையுடன் யாத்திரிகர்கள் வரவேற்கப்பட்டனர். அத்துடன் மதத்தலைவர்களால் சமாதானச் சின்னமான வெண்புறா பறக்கவிடப்பட்டது.

தொடர்ந்து ஆலய அன்ன தான மண்டபத்தில் யாழ் மாவட்ட மனித நேய ஒன்றியத் தலைவர் பரமநாதன் தலைமையில் சமாதானப் பொதுக்கூட்டம் இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, துர்க்கா தேவி தேவஸ்தான பிரதம குரு, சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர், யாழ் ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம், பேராயர் கலாநிதி ஜெபநேசன், குரு முதல்வர்கள் வணபிதா ஜே. பி. செல்வராஜா, நேசகுமார் மற்றும் அருட்கவி விநாசித்தம்பி ஆகியோர் உரையாற்றினார்கள்.

இதே வேளை, சமாதானப் பாத யாத்திரையின் முக்கியத்து வம் குறித்த மகஜர் ஒன்றும் சபையில் வாசித்துக் காட்டப்பட்டது.

இதன் மூலப் பிரதிகள் புலிகளின் தலைவர் பிரபாகரன், ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா, பிரதம மந்திரி ரணில்விக்கிரமசிங்கா ஆகியோருக்கும், அதன் பிரதிகள் விடுதலைப்புலிகள் அமைப்பை தடை செய்துள்ள உலக நாட்டுத் தலைவர்கள் இலங்கையில் உள்ள வெளி நாட்டுத் தூதரகங்கள் மற்றும் சகல அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட உள்ள தாக ஏற்பாட்டாளர்களால் சபையில் தெரிவிக்கப்பட்டது. (இ-12)

---

### வவுனியாவில்..

இந் நிகழ்வில் வவுனியாவில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் திணைக்களங்களும் கலந்து கொள்ளவுள்ளன (வ)


## அறியத்தருகின்றேன்

துரைசிங்கம் தவராஜசிங்கம் இலகடி கோப்பாய் வடக்கு, கோப்பாய் ஆகிய நான் தெரியப்படுத்துவது யாதெனில், எனது C-50 ரக ஹொண்டா மோட்டார் சைக்கிளை

இலக்கம்:~ 104 ஸ்ரீ 2675
செசி இலக்கம்:~ C-9057194
எஞ்சின் இலக்கம்:~ 9057253

எவரும் வாங்கவேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பாக தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

மானிப்பாய் வீதி
கோப்பாய் வடக்கு
கோப்பாய்

வேணுசங்கர்
தொலைத்தொடர்பு நிலையம்
தொ.இல:- 070-212988

(C/3581)



9ஆம் ஆண்டு நினைவஞ்சலி


### அனுருத்தவின்...

போது நீதவான் செல்வி இனோக ரணசிங்க மார்ச் மாதம் 4ந் திகதி வரை அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மடவளைப் பகுதிக் கொலைச் சந்தேக நபர்களான றொகான் ரத்வத்தை, சானுகரத்வத்தை ஆகிய இருவரும் பலத்த பாதுகாப்புடன் முகம் மூடிய நிலையில் நீதிமன்றம் கொண்டு வரப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் அதிக பாதுகாப்புடன் கூடிய தனியான சிறைச்சாலையில் வைக்குமாறு சந்தேக நபர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதவானைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இருவரையும் கண்டி போகம்பரைச் சிறைச்சாலையில் பிரத்தியேக அறையில் உச்சப் பாதுகாப்புடன் காவலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (வ)

---

### ஒற்றை...

பற்றியும் அது தொடர்பான நிகழ்ச்சிநிரல் தயாரிப்பதிலும் எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஆக்க பூர்வமான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு வேண்டிய பூர்வாங்க நடவடிக்கைகளே இப்போது இரு தரப்பினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. இந் நிலையில் அடுத்த 3மாத காலத்திற்குள் பேச்சுவார்த்தைக் கான அடித்தளம் அமைக்கப்பட்டு விடும்.

**யுத்த நிறுத்த அமுலின் போது பின்னடைவுகள் ஏற்படலாம்**

தற்போது எட்டப்பட்டிருக்கும் யுத்த நிறுத்தத்தை அமுல் படுத்தும் போது பல பின்னடைவுகளை அரசாங்கம் சந்திக்கவேண்டிவரும் என எச்சரித்த பிரதமர் யுத்த நிறுத்த மீறல்களைக் கண்காணிப்பதில் உள்நாட்டு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் தமது கடமைகளைச் சிறப்பாகச் செய்வார்கள்.

**கட்டுப்பாடுகளை அரசு விதிக்காது**

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவதற்குரிய எத்தகைய கட்டுப்பாடுகளையும் அரசாங்கம் விதிக்கமாட்டாது.

1995ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தமே சில திருத்தங்களுடன் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**நோர்வேக்கு பூரண அதிகாரம்**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இவ்வொப்பந்தத்தை அமுல்படுத்தும் பூரண அதிகாரம் நோர்வே அரசுக்கு உண்டு. இந்த யுத்த நிறுத்தத்தை கண்காணிப்பதற்கு எதிர்வரும் நாட்களில் ஸ்கன்டிநேவியன் நாடுகளைச் சேர்ந்து கண்காணிப்புக் குழு இங்கு வரவுள்ளது.

**புலிகள் ஆயுதங்களை கடத்த முடியாது**

விடுதலைப் புலிகள் கடலில் ஆயுதங்கள் கடத்துவதை இந்தக் கண்காணிப்புக் குழுவினர் கடற்படையினரின் படகுகளில் சென்று கண்காணிப்பார்கள்.

அரசாங்கத்தின் தீர்மானத் தின் ஓர் அம்சமாக அமைச்சர வையின் சம்மதத்துடனேயே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டேன். இதில் எந்தவிதமான மாற்றங்களும் செய்யாமல் விடுதலைப் புலிகளின் தலைவரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார். இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பல முறை பேசியுள்ளேன் என்றும் பிரதமர் அங்கு கூறினார் (வ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ் மத்திய கல்லூரியின் மணிக்குரல் மணிவதனன் ஜெயசித்ரா அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட கலைவிழாவில் தென்மராட்சியை சேர்ந்த எமது ஆசிரியர் கி. ஜோன்சன் அவர்களுக்கு ''நடனத் தென்றல்'' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப் பட்டமையை மனதார பாராட்டுவதுடன் அவர் மேன் மேலும் நடனக்கலையில் சிறந் தோங்க வாழ்த்துகிறோம்

(C/3579) வடமராட்சி மாணவர்கள்



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்
தேசிய சேமிப்பு வங்கிக் கிளை
## திறப்பு விழா
வடமாகாணத்தின் முதல் முன்னோடி வைபவம்

காலம்:– இன்று (25.02.2002) திங்கள். காலை8.30 (இ.நே)

மங்கள விளக்கேற்றல்:–
திரு. க. இராசதுரை (அதிபர்)
திரு. ம. சிவானந்தன் (வங்கிமுகாமையாளர்)
திரு. எல். ஓங்காரமூர்த்தி (பிரதி அதிபர்)
திரு. எஸ். தனேஸ்வரன் (இணைப்பாளர்)

திறந்து வைத்தலும் ஆசியுரையும் :– வங்கி முகாமையாளர்
பரிசளிப்பும் ஆசியுரையும் :– அதிபர் (விசேட கணக்குப் பூர்த்தியாக்கியோர்க்கு)
புதிய கணக்கு ஏற்றல் :– திரு. இ. இராஜேஸ்வரன்
நன்றியுரை :– திரு. எஸ். கிருஷ்ணானந்தன்


ஒருங்கமைப்பு நாக.தமிழிந்திரன்

(C/3582)



இளைய தலைமுறைக்குக் களம் அமைக்க
வலம்புரியின் வாரமலர்

தோற்றம்
19
-
12
-
1945



மறைவு
06
-
03
-
1993

அமரர்

**வைத்திலிங்கம் குலநாயகம்**

*திதி:25.02.2002*

அன்பு அப்பாவே
ஆண்டுகள் எத்தனை கழிந்தாலும்
நினைவுகள் என்றென்றும் நீங்காது
ஓம் சாந்தி!

**465/16A வடக்கு வீதி**
**நல்லூர்**

(C/3580)

குடும்பத்தினர்

# சங்கு நாதம்

**27.02.2002(புதன்கிழமை) வெளிவருகிறது.**

**பல்சுவை அம்சங்கள் நிரம்பிய உங்கள் சங்குநாதத்திற்கு முந்துங்கள்**

## அன்பார்ந்த வாசகர்களே!

வலம்புரியின் வாரமலர் வானவில் என முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் எமக்கு ஆலோசனையும் அறிவுரையும் வழங்கிவரும் மதப் பெரியார்கள், யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அறிஞர் பெருமக்களின் ஆலோசனைக்கமைய ''சங்குநாதம்'' எனப்பெயர் சூட்டப்பட்டுள்ளதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஏற்கனவே தரப்பட்ட அறிவிப்பால் தங்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகிறோம்

ஆசிரியர்


அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு........



# அர்ச்சனா ஜுவலர்ஸ்



**118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**



இப்பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.